Registered as a NewsPaper
இலவச பிரதி
விலை ரூபா:-10

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-11 | 27-09-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-222


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

தியாகி லெப். கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் நினைவு நாளான நேற்று தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் இருவரதும் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தினார்.





# தமிழர் தாயகமெங்கும் தியாகி திலீபனின் உணர்வுபூர்வமான நினைவு நிகழ்வுகள்!

## ஊர்வலங்கள் உண்ணாவிரதங்கள் என்பனவற்றில் பெருமளவான மக்கள் பங்கேற்பு

(கிளிநொச்சி)

*தியாகி லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. உருவப்பட ஊர்வலம், உண்ணாவிரதம், பொதுக்கூட்டங்கள் என நேற்றுக்காலைமுதல் இரவுவரை அனைத்து இடங்களிலும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்று தியாகி திலீபனை நினைவு கூர்ந்தனர்.*

கிளிநொச்சியில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் கிளி நொச்சி கந்தசுவாமி ஆலயமுன்றலில் ஆரம்பிக்கப்பட்டது.

கந்தசுவாமி ஆலயமுன்றலிலிருந்து தியாகி திலீபனின் திருவுருவப்படம் தண்டிகையில் வைக்கப்பட்டு மங்கல இசை முழங்க ஏ-9 நெடுஞ்சாலை வழியாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

ஊர்வலத்தின் இடையிடையே நிறுத்தப்பட்டு, தீபம் காட்டி, தேங்காய் உடைத்து மக்களால் பூசிக்கப்பட்டது. தொடர்ந்து 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக வளாகத்தினை தியாகி திலீபனின் திருவுரு

(13ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு ம.வி. முன்னணியையும் அழைப்பேன்

### -ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

தேர்தலில் நான் வெற்றிபெற்றால் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணிக்கு(ஜே.வி.பி) அழைப்பு விடுப்பேன் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பதவியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.மேலும் தெரிவிக்கையில், சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு மக்கள் விடுதலை முன்னணிக்கு சந்தர்ப்பம் வழங்குவோம். பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்த பின்னர் நாட்டின் ஒருமைப்பாடு, பிரிவினை ஆகியன தொடர்பாக அவர்களது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணியினரைக் கோருவோம் பேச்சுவார்த்தைக்கு வருகைதந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்தாவிட்டால் போ.க.குழு காரியாலயம் முன் உண்ணாவிரதம்

### – வவு. கோதாண்டர், நொச்சிக்குளம் மக்கள் மகஜர்

(வவுனியா)

இராணுவ நடவடிக்கையின்போது வலுகட்டாயமாகஇடம்பெயர்க்கப்பட்ட தாம் தமது சொந்தக் கிராமத்தில் ஒரு வாரத்தினுள் மீளக் குடியமர்த்தப்படாத பட்சத்தில் தாம் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு காரியாலயத்தின் முன்பாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக வவுனியா கோதாண்டர் நொச்சிக் குளம் மக்கள் நேற்று வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்துள்ளனர்.

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த தம்மை தமது சொந்த இடத்தில் குடியமர்த்துமாறும் கடந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## சோமவன்சவின் உரைகுறித்து முன்னாள் படை அதிகாரிகள் சீற்றம்

### – ஜே.வி.பி, ஹெல உறுமவினர் யுத்தத்திற்குச் செல்லட்டும்

சிறிலங்கா இராணுவத்தை கலைத்துவிட வேண்டும் என்றும் யுத்தத்தை தொடர வேண்டும் என்றும் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் கூறிவரும் கருத்துகளுக்கு கடும் எதிர்ப்பு தொடர்கிறது சிறிலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க மற்றும் பாதுகாப்பமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்டின் பேர்னாண்டோ ஆகியோரின் கண்டனக் கருத்துகளை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஹரி குணதிலக்க கூறுகையில்;

இராணுவத்தைக் கலைத்துவிட வேண்டும் என புதுமையான ஒரு கதையைத்தான் சோமவன்ச அமரசிங்க கூறியிருக்கிறார்.யுத்தமொன்று வந்தால் அப்போது யார் யுத்தம் செய்வது? அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டம் பாண்டிருப்பு மாரியம்மன் கோவில் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் உந்துருளி அணியினரின் பலத்த தாக்குதலுக்கு இலக்கான இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உளர்தி திருத்துமிடம் ஒன்றில் வேலை செய்யும் இவ் இரு இளைஞர்களும் உந்துருளியில் சென்று கொண்டிருந்தபோது, இராணுவ உந்துருளிப் படையினர் இவர்களை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த ராஜ பக்ஷவின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் நேற்று பேச்சுவார்த்தை ஒன்று இடம் பெற்றுள்ளது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் அமைச்சர்கள் நிமால் சிறிபால, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேம ஜெயந்த, ரிஸ்வின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை சனாதிபதித்தேர்தலை கண்காணிக்க விருப்பம் தெரிவித்துள்ள நான்கு சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தேர்தல் ஆணையாளரை இன்று சந்திக்கவுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்தது. சனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு, பொதுநலவாய அமைப்பு, ஆசிய தேர்தல் அதிகாரிகள் சங்கம், ஐரோப்பிய ஒன்றியம் என்பன தேர்தல் செயலகத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சு

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான ட்ரக் வண்டி மீது கைக்குண்டு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

சீனன்குடா விமானத் தளத்திலிருந்து திருகோணமலைக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திரும்பிக் கொண்டிருந்தபோது இரவு 8.30 மணியளவில் திருகோணமலை அநுராதபுரம் சந்தியில் இந்த ட்ரக் வண்டி மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இந்த வண்டியில் எட்டுப் படையினர் பயணித்துள்ளனர். கைக்குண்டு வெடிக்காத

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறவிடப்பட்டுள்ளது

பி.அலோசியஸ் என்பவருடைய கைப்பை ஒன்று தாளையடியில் இருந்து முல்லைத்தீவு செல்லும் பேருந்தில் ஊழவனூர் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.

(6616)

### தவறவிடப்பட்டுள்ளது


விசுவமடுவிற்கும் கைவேலிக்கும் இடையில் துரைசிங்கம் சுதர்சன் என்பவருடைய அடையாள அட்டையும் (850121800V) தமிழீழ போக்குவரத்து அனுமதி அட்டையும் 15-08-2005 இற்கும் 02.09.2005 இற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.

(6618)

### காணி விற்பனைக்குண்டு

உடையார் கட்டு சுதந்திரபுரம் மத்தியிலுள்ள கணேசன் செல்வகுமார் என்பவருடைய 786-ஆம் இலக்கமுடைய 130 பயன் தரும் தென்னை மரங்களைக் கொண்ட இரண்டரை (2 1/2) ஏக்கர் காணி விற்பனைக்குண்டு தொடர்பு:- மாணிக்கன் புடவையகம், முல்லை வீதி, விசுவமடு.

(6452).



## சாவு அறிவித்தல்

### காசிப்பிள்ளை விநாயக மூர்த்தி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி இல.46, கட்சன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், சமாதான நீதவானும், சமூக சேவையாளருமாகிய காசிப்பிள்ளை விநாயக மூர்த்தி 26.09.2005 நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் அமரத்துவமடைந்துவிட்டார்.

இவர் காசிப்பிள்ளை - சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகனும், கமலத்தின் அன்புக் கணவரும், காலம்சென்ற கந்தையா, நடராஜா, மனோன்மணி பராசக்தி மற்றும் மகாலிங்கம, பரஞ்சோதி, கமலாம்பிகை ஆகியோரின அன்புச் சகோதரரும் ஆவார். மனோகரி, மனோரஞ்சினி, காலம் சென்ற புவனேந்திரன், பத்மினி(கிளி/வட்டக்கச்சி ம.வி..ஆசிரியர்), அமுதகௌரி (பிரான்ஸ்), கோமளவல்லி (கனடா), சகலகலாவல்லி (சுவிஸ்), ஞானஸ்ரீதரன் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவானந்தன்(வேல்முருகன் ஸ்ரோஸ்,கிளிநொச்சி), சுப்பிரமணியம்(வட்டக்கச்சி), சுரேஸ் (உரிமையாளர் சிவசிவன் பல்பொருள்வாணிபம், வன்னியன்தொலைத்தொடர்பகம் வட்டக்கச்சி), ஸ்ரீக்குமார் (பிரான்ஸ்) சந்திரகுமார் (கனடா), உதயகுமார் (சுவிஸ்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருட்செல்வி (கனடா), சசிரேகா (கனடா), வர்த்தனி(ஆசிரியர் கிளி/பண்ணங்கண்டி இ.த.க. பாடசாலை), கஜேந்தினி(யாழ். பல்கலைக்கழகம்), சரவணபவானி (வயம்ப பல்கலைக்கழகம்), ஸ்ரீகணேசவேல் (கிளி/மத்திய கல்லூரி),கோகுலவதனா(எழுதுநர் பிரதிமாகாணசுகாதார சேவைகள்திணைக்களம்), ஜெயரட்ணம் (L.E.E), சுரேகா, மதனகுமார்(பேராதனை பல்கலைக்கழகம்), பிரதாபன், புஸ்பானந்தன் (கிளி/இராமநாதபுரம்மேற்கு அ.த.க பாடசாலை), பிரணவி, சுவர்ணஸ்ரீ, மயூரன் (பிரான்ஸ்), நிதர்சன், நிருஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். பவித்திரன், ஜெசிக்கா (கனடா), மதுரன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் 27.09.2005 இன்று செவ்வாய்க்கிழமை ஈமக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(6740)

## 7 ஆம் ஆண்டு நினைவதனில்...



லெப்.கேணல்
ஜனா/காந்தசீலன்
(நடேசன் ஜெயந்தன்)

தாயின் மடியில்
18.04.1974

தாயக மண்ணில்
27.09.1998

கல்லறைக்குள் துயில் கொள்ளும் ~எம்
காவிய நாயகனே ஜெயந்தா,
கலங்காமல் துயில்கொள் கண்ணா
கரிகாலன் படை வென்றிடும் நாள்
வெகு விரைவில்~ அந்நாள்
மீண்டும் வந்துவிடு~எம்மிடம்

பாரதிநகர்,
மல்லாவி.

(6735)

தகவல்:-
குடும்பத்தினர்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்

2005-2006 ஆம் கல்வியாண்டுக்கானபடிவம் இன்று செவ்வாய்க்கிழமை (27.09.2005) பிற்பகல் 3.மணியில் இருந்து சனிக்கிழமை வரை விநியோகம் செய்யப்படும்.

படிவம் ஒன்றின் விலை-200/= மட்டும்

பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல,04,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.தொ.பேசி 6693

(சி.12925)



# றீற்றா சூறாவளி ஏற்படுத்திய சேதம் 23 ஆயிரம் கோடி இந்திய ரூபாய்களாம்

அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளி ஏற்படுத்திய சேதம் 23 ஆயிரம் கோடி இந்திய ரூபா இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்கும் முயற்சியில் அமெரிக்க இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

றீற்றா சூறாவளி அமெரிக்காவின் டெக்சாஸ், லூசியானா பகுதியில் கடந்த சனியன்று கரையைக் கடந்தது. 120 கி.மீ வேகத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்ததால் பல கட்டடங்கள் சேதமடைந்தன. மின் இணைப்புக்கள் எல்லாம் துண்டிக்கப்பட்டு பல நகரங்கள் இருளில் மூழ்கின. இதனால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு 23 ஆயிரம் கோடி ரூபா இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. றீற்றா தாக்குதல் பயங்கரமாக இருக்கும் என்பதால் டெக்சாஸ் லூசியானா, கேவல்ஸ்டன் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது. ஆனால் அரசின் இந்த உத்தரவை டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள பலர் கேட்கவில்லை. தங்கள் வீட்டுக்குள்ளே பதுங்கி விட்டனர். இப்போது வீட்டை விட்டு வெளியேற முடியாமல் வெள்ளத்தில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் தவிக்கின்றனர். இவர்களை மீட்கும் பணியில் இப்போது இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆப்கானில் உலங்கு வானூர்தி விபத்து ஐந்து அமெரிக்கப் படையினர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஐந்து அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தென் கிழக்குப் பகுதியில் உள்ள தாய் சோபான் மாவட்டத்தின் மத்திய பகுதியில் அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான சைனூக் 47 ரக உலங்கு வானூர்தி ஒன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டது. அப்போது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உலங்குவானூர்தியில் தீப்பிடித்தது.

இதனால் கீழே விழுந்து நொருங்கிய அந்த உலங்குவானூர்தியில் பயணம் செய்த ஐந்து



பேர் உயிரிழந்தனர். மீட்புப் பணி நடைபெற்று வருவதாக இராணுவ அதிகாரி ஜிம் யான்ட்ஸ் தெரிவித்தார்.

# ஈராக் போர், உலக மயமாக்கலுக்கு எதிர்ப்புத்தெரிவித்து அமெரிக்க நகரங்களில் பல்லாயிரம் பேர் திரண்டு பேரணி

*(வோஷிங்டன்)*

***ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படைகளை திரும்பப் பெற வலியுறுத்தி அமெரிக்கா முழுவதும் கண்டன ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சவப்பெட்டிகளை எடுத்துச்சென்றபடி அதிபர் புஷ்சை கடுமையாக விமர்சித்தனர்.***

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்ததைக் கண்டித்தும் , உலகவங்கியின் தாராள மயமாக்கல் கொள்கையைக் கண்டித்தும் அமெரிக்காவில் உள்ள போர்எதிர்ப்புச் சங்கம் சார்பாக அமெரிக்காவில் கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. ஊர்வலத்தில் ஈராக் போர் மற்றும்1960 ஆம் ஆண்டுகளில் நடந்த வியட்நாம் போரில் உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

வோஷிங்டன் நகரத்தில் நடந்த கண்டனப் பேரணியில் ஈராக்கில் இதுவரை உயிரிழந்த 1900அமெரிக்கவீரர்களின் படங்கள் வரையப் பட்ட நீண்ட கறுப்புவண்ண பதாகைகள்எடுத்துச் செல்லப்பட்டன.ஊர்வலத்திற்கு "போர் எதிர்ப்புச் சங்கத்தை" உருவாக்கியவரும் ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்க வீரரின் தாயாருமான சிண்டி சீஹான் , தலைமை தாங்கினார்.

அதிபரின் வெள்ளை மாளிகைக்கு பின்புறம் உள்ள எல்லிப்ஸ் பூங்காவில் முடிந்த இப்பேரணியில் பேசிய சீஹான் "போரை முடிவுக்கு கொண்டு வர மக்கள் சக்தியை திரட்டவேண்டும்" என்றார்.இந்தப் பேரணியில் ஒரு இலட்சம் பேர் கலந்துகொண்டதாக போர்



எதிர்ப்புச் சங்கத்தினர் தெரிவித்தனர்.ஆனால் ஆயிரம் முதல் மூவாயிரம் பேர் மட்டுமே கலந்து கொண்டதாக வோஷிங்டன் பொலிசார் கூறினர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த பேரணியில் 60இற்கும் மேற்பட்ட சவப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன. பேரணியில் 15 ஆயிரம் பேர் கலந்து கொண்டு ஈராக்கிலிருந்து படைகளை மீளப் பெறக்கோரி கோஷங்கள் எழுப்பினர். இது தவிர கலிபோர்னியா மற்றும் சான் பிரான்சிஸ்கோ நகரங்களிலும் கண்டனப்பேரணிகள் நடைபெற்றன.



றீற்றா சூறாவளி தாக்குதலுக்குப் பின் லுசியானா நகரில் உள்ள சார்ல்ஸ் ஏரியை ஒட்டியுள்ள பகுதிகளிலும் மழை நீர் தேங்கிவிட்டது இதனால் தெருக்களில் தண்ணீர் அலை அடித்து ஓடுகிறது.

# ஏழு பேர் கைது

(லாகூர்)

பாகிஸ்தானில் லாகூர் நகரில் கடந்த வாரம் இரண்டு குண்டுகள் வெடித்தன. இதில் எட்டுப் பேர் பலியாகினர். இந்தக் குண்டு வெடிப்பில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஏழு பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

# பெரு நாட்டில் நிலநடுக்கம்

(லிமா)

பெருநாட்டில் லிமா நகரிலிருந்து 670 கி.மீ தூரத்தில் நேற்றுக் காலை இந்திய நேரடிப்படி 7.25 மணிக்கு பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் நான்கு பேர் பலியாகினர். மின்சாரம், தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவில் எர்த் பகுதியில் றீற்றா சூறாவளி தாக்கிய கரும்புத் தோட்டம்.

# பாக்தாத்தில் பல்வேறு குண்டுவெடிப்பு 21 பேர் பலி; 36 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் ஹிலா நகரங்களில் நேற்றுமுன்தினம் நடந்த பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 21 பேர் பலியாயினர். 36 பேர் காயமடைந்தனர்.

கிழக்கு பாக்தாத் மாவட்டம் புதுபாக்தாத் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தை நேற்று முன்தினம் தாக்குவதற்காக வந்த வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் பலத்த சத்தத்துடன் வடித்தது. இந்தக் குண்டு வெடிப்பில் உயிரிழந்த பொலிசார் எண்ணிக்கை குறித்த தகவல் உடனடியாக தெரியவில்லை.எனினும் இந்தச் சம்பவத்தில் பொலிசார் மற்றும் பொதுமக்கள் உட்பட குறைந்தது பத்து பேர்பலியாகி இருக்கலாமென பாக்தாத் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.



இது தவிர, மேற்கு பாக்தாத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கபடையினர் மீது முக்ததாஅல்சதார் தலைமையிலான ஷியா தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கெரில்லாத் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, இருதரப்புக்குமிடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.ஒரு மணிநேரத்திற்கும் மேல் நீடித்த இந்தச் சண்டையில் எட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க படையினர் தெரிவித்தனர்.

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள ஹிலா நகர சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் மிக பரபரப்பாக காணப்பட்டது..அப்போது உந்துருளியில் வந்த தற்கொலைபடையாளி ஒருவர் தன் உடம்பில் பொருத்தியிருந்த குண்டுகளை வெடிக்கச்செய்தார் இந்த பயங்கரமான சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர் பொதுமக்கள் 36பேர் படுகாய மடைந்தனர் என்று ஈராக் பொலிசார் தெரிவித்தனர்.

ஹிலா நகரம் மீது தீவிரவாதிகள் ஏற்கனவே பல முறை தாக்குதல் நடத்தியுள்ளனர்.கடந்த பெப்ரவரியில் [illegible]குகார்க் வெடிகுண்டு வெடி[illegible]ல் 100 பே[illegible] இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் "முதல் மழை" நடவடிக்கை

பலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் விமானப் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் எட்டுப் பெண்கள் உட்பட 11 பேர் காயமடைந்தனர்.

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் படையினர் திரும்பப் பெற்று இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் பலஸ்தீன ஹமாஸ் மற்றும் ஜிகாத் தீவிரவாதிகள் செட்ராட் என்ற பகுதியில் இஸ்ரேலியர்கள் மீது திடீர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலியர்கள் ஆறு பேர் காயமடைந்தனர். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மேற்குக் கரைப் பகுதியில் சனி இரவு பலஸ்தீனப் பகுதியில இஸ்ரேல் விமானப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் பெண்கள் எட்டுப் பேர், சிறுவர்கள் மூன்று பேர் படுகாயம் அடைந்தனர். நள்ளிரவில் மேற் கொள்ளப்பட்ட இஸ்ரேல் தாக்குதலுக்கு "முதல் மழை" என்று பெயரிட்டுள்ளது. ஹமாஸ் தீவிரவாதத் தலைவர்களை கொல்ல இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இது குறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறுகையில்; பலஸ்தீன தீவிரவாதிகளின் ஏவுகணை வீச்சு தாக்குதலை முறியடிக்க நாங்கள் எல்லைகளில் தனி முகாம் அமைகக்கவும் தயாராக இருக்கின்றோம்.அதன் மூலம் ஏவுகணைத் தாக்குதல்களை பீரங்கிகள் மூலம் முறியடிப்போம் என்று தெரிவித்தனர்.

# மாவீரர்களை நினைவில் சுமந்து சுவிஸ் லுசேர்ன்னில் எழுச்சி நிகழ்வு



## "போரும் சமாதானமும்" நூல் வெளியீடும் இடம் பெற்றது

விடுதலைப் போராட்டத்தின் தடையகற்றிகளான லெப் கேணல் குமரப்பா, லெப் கேணல் புலேந்திரன் தியாகி லெப். கேணல் திலீபன், 2ஆம் லெப் மாலதி, கேணல் சங்கர், லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் உட்பட பதினேழு மாவீரர்களின் நினைவு சுமந்து சுவிஸ் லுசேர்ன் மாநகரத்தில் எழுச்சி பூர்வமாக நினைவு எழுச்சி நிகழ்வு நடைபெற்றுள்ளது. இதன் போது அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய "போரும் சமாதானமும்" நூல் வெளி யிட்டு வைக்கப்பட்டது. அரங்கம் நிறைந்த மக்களின் இவ் நினைவெழுச்சி நிகழ்வு தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், மாவீரர் வணக்கம், மலர்வணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் சிறப்பு அம்சமாக போரும் சமாதானமும் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாறு அதன் படிநிலைப் பரிமாணம் விடுதலைப் புலிகளின் தோற்றம், வளர்ச்சி, இன்று உயர்நிலைப் போராட்ட வடிவம் என்று பல்வேறு வடிவம் தாங்கி வெளிவந்துள்ள இந்த நூல், தமிழர்களுக்கு ஒரு முக்கிய ஆவணமாக பதிவாகியுள்ளது என்பதை இந்த வெளியீட்டு விழா வெளிப்படுத்தி உள்ளது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய கிருஷ்ணா அம்பலவாணர் பாலா அண்ணர் அவர்களினுடைய தனித்துவம் அவருடைய சிந்தனை நெறியாள்கை தலைமைத்துவம் மீதான பற்றுறுதி என பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டு கருத்துரை வழங்கியதோடு, மூன்றாவது தலைமுறைக்கும் அப்பால் வருகின்ற தமிழ்ச் சமூகம் தெரிந்து கொள்வதற்கு தமிழர்களுக்கான ஒரு ஆவண நூல் இதுவென்றும் இதை ஒவ்வொரு தமிழ் மக்களும் வாங்கிப்படிப்பதோடு பாதுகாக்க வேண்டியதும் கடமையாகும் என்று வேண்டி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்து கொண்டார்.

# திலீபன் நினைவுகளுடன் கலை நிகழ்வுகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பிரதேச ரீதியாக கலை நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை இரவு எட்டு மணியளவில் மல்லாவி வண்ணன் விளையாட்டு மைதானத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலாளர் சி. சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பொதுச் சுடரினை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ. அமிர்தலிங்கம் ஏற்ற திலீபனின் திருவுருவப் படத்திற்கு சங்க நாத இயக்குனர் பேபி ஆசிரியை கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வசந்தி ஆகியோர் ஈகச்சுடர்களை ஏற்றி வைக்க மலர் மாலையினை துணுக்காய் பிரதேச போராளிகள் மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் செல்வி தேன்கவி அணிவித்தார்.

தொடர்ந்து மலர் வணக்கம் அகவணக்கம் என்பன இடம் பெற்று அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது. நிகழ்வில் வரவேற்புரையை துணுக்காய் பிரதேச மாதர் சங்கத் தலைவி திருமதி க.விஜயலட்சுமி ஆற்றினார்.

நினைவுரையினை திருநகர் அ.த.க பாடசாலை உப அதிபர் க. முருகேசு நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் செல்வி. சி.சசி ஆற்றினார். இந் நிகழ்வில் மல்லாவி பிரதேச கலைக்குழுவினரின் புதுயுகம் பிறக்கும் என்னும் வில்லிசையுடன் பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான சங்கநாதம் கலை நிகழ்வும் இடம் பெற்றன. நிகழ்வில் பொது அமைப்புக்கள் பொது மக்கள் போராளிகள், கலைஞர்கள் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# தமிழினத்திற்கு விடிவு கிடைக்க எமது பலத்தை வலுப்படுத்த வேண்டும்

## திலீபன் நினைவு நிகழ்வில் இளந்திரையன்

(மட்டக்களப்பு)

தமிழினத்திற்கு ஒரு விடிவு தேவை. அது எமது தேசியத் தலைவரின் காலத்தில் கிடைக்கும் அதற்கு மக்களாகிய நாம் எதிரி அஞ்சுமளவிற்கு எமது பலத்தை வலுப்படுத்த வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

பழுகாமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் 18ஆவது ஆண்டு நிறைவின் 11ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; எமது தமிழர் தாயகத்தில் தேசியத் தலைவரினால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் உருவாக்கப்படாமல் இருந்திருந்தால் எமது பிரதேசங்கள் யாவும் இன்று சிங்களப் பேரினவாதிகளின் கையில் தான் இருக்கும். இன்றைய நிலையில் சிறிலங்கா அரசு மாத்திரமல்ல சர்வதேச சமூகமே உணர்ந்து விட்டது. இதற்குக் காரணமாக இருப்பவர்கள், தியாகியாகவும், கரும்புலியாகவும், வேங்கையாகவும் தம்முயிரை தமிழ் இனத்திற்காக ஈர்ந்துக் கொண்டவர்களையே சாரும்.

இந்த வகையிலேதான் திலீபனும் ஒருவன். இந்தியப் படையினர் செய்த அட்டூழியங்களைப்பொறுக்க முடியாது அகிம்சை வழியில் தனது போராட்டத்தை ஆரம்பித்தவர். தமிழ் மக்கள் மீதும், தமிழர் தாயகம் மீதும் படையினரால் மேற்கொள்ளப்படும் அடாவடித் தனங்கள் நீக்கப்பட வேண்டும் என்று தமிழ் மக்களின் விடுதலைக்காக தன் உயிரை ஈர்ந்தவர் தியாகி திலீபன் இவரது தியாகத்தினை இன்று உலகமே வியந்து நிற்கிறது.

நாட்டின் அரசியலைப் பார்க்கும் போது சிங்களப் பேரின வாதிகளும், அரசியல்வாதிகளும், தங்களின் செயற்பாடுகளை மாற்றிக் கொண்டு வருகிறார்கள். தமிழ் மக்களின் உரிமைகளை நினைத்துக் கூட பார்க்கிறார்களில்லை.இப்படியாக எமது மக்கள் என்றுமே அடிமைப்பட்டு வாழ வேண்டிய நிலையிலுள்ளோம். அரசின் ஊடகங்கள் யாவும், விதவிதமான பொய்ப் பிரச்சாரங்களைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

சமாதானம் என்று கூறிவிட்டு சிங்கள அரசு தொடர்ந்து தமிழ் மக்கள் மீது படுகொலைகளை நடாத்திக் கொண்டே வருகின்றது. இதற்குச் சமாதானத்தைக் குழப்புகின்ற சக்திகளை அடக்க வேண்டும். அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு நாம் பலமாகவும், வலுவாகவும், நிறைவாகவும் இருக்க வேண்டும். சிங்கள அரசு மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பிக்கு மானால் அது இறுதிக்கட்ட யுத்தமாகவே அமையும் இதனை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

முன்பு நடந்த படுகொலைகளைப் போன்று மீண்டும் நடைபெறுமாயின் அதிலிருந்து தவிர்த்துக் கொள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் ஆயுதப் பயிற்சி காலத்தின் கட்டாயமாக வழங்கப்பட்டிருக்க வேண்டுமென தனது உரையில் குறிப்பிட்டார்.

# தியாகி திலீபனை நினைவு கூர்ந்து கனடாவில் தியாக தீப கலை மாலை





தியாகி லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு தியாக தீப கலைமாலை நிகழ்வு கனடா நாட்டின் மிசிசாகா நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது. மிசிசாகா பகுதி உலகத் தமிழர் இயக்க கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச் சுடரினை 1989ம் ஆண்டு இந்தியப் படைகளின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவைத் தழுவிய வீரவேங்கை சாந்தனின் (குமாரசாமி சாந்தகுமார்) தாயார் ஏற்றி வைத்தார்.

அதனையடுத்து கனேடிய தேசியக் கொடியினை 1991ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆகாய கடல்வெளி சமரில் வீரச்சாவைத் தழுவிய கப்டன் சுதனின்(ஜீவகுமார் இராசரத்தினம்) தந்தையார் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை 1989ம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் தும்பனின் (மரியதுரை அந்தோனிப் பிள்ளை) பெற்றோர் ஏற்றி வைத்தனர்.

அதனையடுத்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை கப்டன் சுதனின் தாயாரும், மேஜர் தும்பனின் தாயாரும் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மலர் வணக்க நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றது. தீப நடனம், கீதாஞ்சலி, கோபுரம் என்ற நாடகம், எழுச்சி நடனம், ஓட்டை என்ற நாடகம், கானமும் காட்சியும் என்பன நடைபெற்றதுடன் வானம்பாடி இசைக்குழுவினரால் எழுச்சிப் பாடல்களும் இசைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

# ஆவணம் தொடர்பான பயிற்சி வகுப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனமான மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவனம் தனது திட்டக் கிராமமான மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மாளிகைத்திடல், வேட்டையான் முறிப்பு, மினுக்கன் ஆகிய கிராமங்களிலுள்ள பயனாளிகளுக்கு டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தினால் அண்மையில் ஆவணம் தொடர்பான பயிற்சி வகுப்பொன்றினை நடாத்தியுள்ளது.

டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தின் அலுவலர் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சிவகுப்பை, மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவன சமூக ஊக்குவிப்பாளர்களும் இணைந்து நடாத்தினர். இப்பயிற்சி வகுப்பில் 20 பயனாளிகள் வரை கலந்துகொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




*திருகோணமலை மாவட்ட பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் வசதி குறைந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக வாகனங்களைக் கழுவும் வேலைத் திட்டம் ஒன்றினை திருகோணமலையில் நேற்று முன் தினம் மேற்கொண்டனர். அவர்கள் வீதிகளில் வைத்து வாகனங்களைக் கழுவுவதைப் படத்தில் காணலாம்.*

# தியாகி லெப். கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவில்....

## கிளிநொச்சியில்...














## நல்லூரில்.....







## தென்மராட்சியில்....





(சோ. 41, 28)

# ஓயாத அலைகள்–02 கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

பகுதி-5

ஓயாதஅலைகள் இரண்டின் வெற்றிக்குப்பின்னணியில் பல மாவீரர்களின் தியாகங்களும்,போராளிகளின் தீவிர முயற்சியும் மனவுறுதியும் அவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள விடுதலை வேட்கையுமே அமைந்துள்ளன.

இவற்றோடு உலகின் எந்தவொரு இராணுவ விற்பன்னர்களாலும் உணரப்பட முடியாத அளவு போரியல் தந்திரோபாயங்களைக் கொண்ட தமிழீழ தேசியத் தலைவரின் திட்டமிட்ட தாக்குதல் வியூகங்களும். அவரின் மிக நேர்த்தியான படை நகர்த்தல் தந்திரோபாயங்களுமே இவ் வெற்றிக்கு காரணங்களாக அமைந்தன.

சிறிலங்கா இராணுவத்தால் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கான மிகப் பெரும் படை நடவடிக்கையான ஜெயசிக்குறு களத்தினை எதிர்கொண்டு வந்த சமகாலத்தில் பல இராணுவ ஆய்வாளர்களாலும் உலகின் பிரசித்திபெற்ற இராணுவத் தளபதிகளாலும் அசைக்க முடியாத அதியுயர் பாதுகாப்பு நிலையிலுள்ள படைத்தளம் இதுவென வர்ணிக்கப்பட்ட இத் தளத்தினை, அவர்கள்



தாக்கியழிக்கும் திட்டத்திற்கு தலைமை வகித்த வரும் தற்போதைய வடபோர் முனைக் கட்டளைத்தளபதியுமாகிய கேணல்தீபன் அன்றைய கள நிலவரங்களையும் தமது தாக்குதல் வியூகங்களையும் மாவீரர்களின் தியாகங்களையும் போராளிகளின் தீர மிகு தாக்குதல் வெற்றிக்கான அவர்களின் கடும் உழைப்பு என்பவற்றை இன்றுஇவ்வாறு நினைவு படுத்துகிறார்.

ஓயாத அலைகள் 01இன் மூலம் முல்லைத்தீவு படைத்தளம் எம்மால் அழிக்கப்பட்டபின் அதன் வீழ்ச்சியை சிங்கள மக்களிடம் மறைப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் மிகப் பெரும் நகர்வொன்றைச் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டது.

இதன்படி ஆனையிறவுத்தளத்திலிருந்து கிளிநொச்சியை கைப்பற்றுவதற்குரிய நகர்வை சிறிலங்கா இராணுவம் செய்யத் தொடங்கியது அதிலே சத்ஜெய 1,2,3 என்ற நடவடிக்கையை செய்து 1996ஆம் ஆண்டு யூலை மாதத்தில் கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்து நிலை கொண்டார்கள்.

இந்தப் பிரதேசத்தை பொறுத்த வரையில் எதிரியினுடைய பாதுகாப்பிற்கு சாதகமான புவியியல் அமைப்பை கொண்டதாகத்தான் இந்த கிளிநொச்சி பிரதேசம் உள்ளது. ஏனெனில் வயல் சார்ந்த ஒரு பிரதேசமாக இருப்பதாலும் பெரும் வெளியான பிரதேசமாகவும் சிறிய சிறிய பற்றைகளைக் கொண்ட பகுதியாகவும் இருப்பதனால் இது ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றி பாதுகாக்கக் கூடிய புவியியல் அமைப்பைக் கொண்டதாக இருப்பதனால் எதிரிநிலை கொள்வதற்கு சாதகமாக அமைந்திருந்தது.

இந்தப் பகுதியைப்

குறிப்பிட்டதைப் போன்றே பாதுகாப்பு அரண்கள், நிலைகள் விநியோகங்கள் படை எண்ணிக்கை எறிகணைச்சூட்டு ஆதரவுகள் என்பனவற்றோடு, நிலையெடுத்திருப்பவர்களுக்கு மிகமிக சாதகமான நிலவமைப்பும் கொண்ட இத்தளத்தினை ஒரு சில நாட்களுக்குள் துடைத் தழித்ததன் மூலம் உலகின் இராணுவ வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கினார் தமிழீழ தேசியத்தலைவர். எண்ணிக்கையில் மிகக் குறைந்த போராளிகளை மட்டும் வைத்துக் கொண்டு ஜெயசிக்குறு பெரும் சமர் நடந்த சம நேரத்தில் இந்தப் பெரும் வலிந்த தாக்குதலை நடத்தி வெற்றி கொண்ட சந்தர்ப்பத்தில் இரு களங்களையும் சாதகமான நிலையில் வைத்திருந்த தந்திரோபாயம் பின்னைய காலங்களில் எதிரிக்கு மட்டுமன்றி இராணுவ வல்லுனர்களுக்குமே பெரும் அதிர்ச்சியையும் அதிசயத்தையும் ஏற்படுத்தியிருந்தது.இவ்வாறு வெற்றி கொள்ளப்பட்ட தளத்தின் தாக்குதலுக்கு இடப்பட்ட இரண்டுதிட்டங்களில் ஒன்று ஆனையிறவிலிருந்து வரும் விநியோகத்தை தடை செய்யும்ஊடறுப்பு சமரும் அடுத்து படைத் தளத்தை தாக்கியழிக்கும் திட்டமும் எனவகுக் கப்பட்டிருந்தது.இதன்படி படை முகாமின் முன்னரங்க காவலரண்களும்,இராணுவ வேலிகள் உயர்பாதுகாப்பு நிலைகள் என்பவற்றோடு நான்கு பற்றாலியன் துருப்புக்களின் கடும் எதிர்ப்பையும் விமானத்தாக்குதல், ஆனையிறவு தளத்திலிருந்துஏவப்பட்ட எறிகணை சூட்டாதரவுகள், டாங்கிகளின் தீவிர தாக்குதல் என்பவற்றைவெற்றிகரமாக முறியடித்து முகாமைத்



பிடித்தபின் பலாலியிலிருந்துவிநியோக மையத்தைக் கொண்ட நீண்ட ஒருவிநியோக மார்க்கத்தையும், ஆதரவுகளையும் கொண்ட பலம் வாய்ந்த தளமாக கிளிநொச்சியை மாற்றியதோடுஆனையிறவின் பாதுகாப்பையும் உறுதிப் படுத்தக் கூடிய வகையில்தான் இந்த கிளிநொச்சித் தளம் அமைந்திருந்தது, இத்தளத்தினுடைய அமைவு எவ்வாறிருந்ததெனில் மிகவும் இறுக்கமானதொரு பாதுகாப்பு முன்னரண்களைக்கொண்ட ஒரு பெரிய படைத் தளமாகத்தான் இத்தளம் இருந்தது. அவர்கள் நிலை கொண்ட 1996ஆம் ஆண்டு தொடக்கம் பலப்படுத்தி இத்தளத்தை விடுதலைப்புலிகளால் வெற்றி கொள்ள முடியாதென்ற அளவுக்கு சர்வதேச இராணுவ ஆலோசகர்களின் ஆலோசனைகளோடும் இராணுவ நிபுணர்களின் வழிகாட்டலோடும்தான் ஆனையிறவு கிளிநொச்சி ஆகிய தளங்களைப் பலப்படுத் தியிருந்தார்கள் இத்தளத்திலுள் ஒரு பிரிகேட் துருப்புக்கள் நிலை கொண்டிருந்தன. அதாவது 54-3 பிரிகேட் இத் தளத்தினிலிருந்தது. அதற்குஒரு பிரிகேடியர் பொறுப்பாக இருந்தார்.இவருக்குக் கீழ் கிட்டத்தட்ட நான்கு பற்றாலியன்களைக் கொண்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புக்கள் நிலை கொண்டிருந்தார்கள்.

இத்தளத்தில் இராணுவத்தினர் நிலை கொண்ட ஆரம்ப கால கட்டத்தில் ஜெயசிக்குறு படையெடுப்பும் இடம்பெற்றிருந்ததனால், எமது பாதுகாப்பு வலயங்கள் பெரிய அளவில் இங்கு இருக்கவில்லை.கண்காணிப்பு நடவடிக்கைகளும் வேவு ரீதியான நடவடிக்கைக்குரிய அணிகள் மட்டுமே இங்கு இருந்தார்கள், இதனால் இந்தத் தளத்திலிருந்த இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டு எல்லைக்குரிய அரண்கள் தவிர்ந்த ஏனைய குறிப்பிட்ட பிரதேசத்திலும் தமது நடமாட்டத்தைக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்தவேளைதான் இராணுவம் ஆக்கிரமித்த பகுதிக்கு வெளியேஉள்ள பகுதிகளில் மக்கள் தமது உடமைகளை எடுப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் சென்றவேளை சிறுவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோரை இராணுவத்தினர் கொலை செய்திருந்தார்கள்.

அதற்குப் பிற்பாடுதான் ஜெயசிக்குறு சமர் நடந்து கொண்டிருந்தபோதும் தேசியத்தலைவர் ஒரு திட்டத்தை வகுத்தார். அதாவது ஜெயசிக்குறு நடவடிக்கை நடைபெற்று மாங்குளம் கரிப்பட்டமுறிப்புப் பகுதியை அண்மித்துக் கொண்டிருக்கையில் நாங்கள் கிளிநொச்சிக்குப் பாதுகாப்பு வலயமொன்றை அமைத்து இத்தளத்தினையும் ஒரு முற்றுகைக்குள் முதற் கட்டமாக கொண்டு வந்தோம். இதன் மூலம் வெளிப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய படையினரின் நடவடிக்கைகளை உள்ளே நகர்த்திக் கொண்டுசென்றபின்

கிளிநொச்சி முகாமைத் தாக்குவதற்கான திட்டத்தை வகுத்து 1998 ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் முதலாம் திகதியளவில் தளத்தைக் கைப்பற்றுவதற்கான முதலாவது தாக்குதலை செய்தோம். அந்த தாக்குதலை செய்த போதும் திட்டத்தை. முழுமையாக வெற்றி கொள்ள முடியவில்லை ஏனெனில் எமது திட்டத்தின்படி தளத்தின் மையப்பகுதியில் கரும்புலித் தாக்குதலை நடத்துவதற்காக வெடிமருந்தை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனம் தடம்புரண்டு வெடிக்காது போனதால் திட்டம் முழுமையாக வெற்றியளிக்கவில்லை ஆனால் குறிப்பிட்ட பகுதியை நாங்கள் கைப்பற்றினோம். அதன் பின்னர் கைப்பற்றிய பகுதியில் எமது பாதுகாப்பு அரண்களை போட்டு ஒரு இறுக்கமான முற்றுகைக்குள் கொண்டு வந்தோம். இதன் பின்னர் நாங்கள் கைப்பற்றிய பகுதியை மீள ஆக்கிரமிக்கும் நோக்கில் 1998 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 4ஆம் திகதியும்/1998ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 8ஆம் திகதியும் பெருமெடுப்பிலான இரு நகர்வை இராணுவத்தினர் மேற்கொண்டார்கள்.



இதனை நாங்கள் முறியடித்தோம். இதில் 500 வரையான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 1000 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

இதற்குப் பிறகு கிளிநொச்சித்தளத்தின் நகர்வுகள் எல்லாம் கடுமையாக முடக்கப்பட்டு விட, பின்னர் அவர்கள் நகர்வை மேற்கொள்ளாமல் தாம் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசத்தை பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் கட்டத்தில்தான் அடுத்த கட்ட தாக்குதலுக்கான தயார்ப் படுத்தல்களை தலைவர் மேற்கொண்டார்.அதன்படி நாங்கள் படிப்படியாக வேவு நடவடிக்கைகளை செய்யத் தொடங்கினோம். அதில் உள்வேவினையும் முக்கியப் படுத்தியிருந்தோம். இதேவேளை தலைவர் ஒரு திட்டத்தை தந்திருந்தார். அதாவது கிளிநொச்சித் தளத்தை தாக்குகின்ற சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி தளத்தையும் பரந்தன் தளத்தையும் இடையில் துண்டாடி இத்தளத்தை தனிமைப் படுத்தித் தாக்குதலை மேற்கொள்வது தான் அடிப்படையான திட்டம். அதற்கேற்றவாறு வேவுஅணிகளை நகர்த்தி உள்வேவுகளை பார்த்தோம். இதற்கு முதல் பரந்தன், ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகள் வேவு பார்க்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. அவற்றை உறுதிப்படுத்துவதற்காகவும் வேவு அணிகளை அனுப்பினோம். அத்தோடு முகாமை துண்டாடுவதற்கான இடத்தையும் வேவின் மூலம் தெரிவு செய்தோம் இதன்படி தலைவர் திட்டத்தினை வகுத்தார். அதில்ஆனையிறவையும் கிளிநொச்சியையும் பிரிக்கின்ற திட்டத்தையும் பின்னர் கிளிநொச்சி தளத்தை தாக்கியழிப்பதற்கான திட்டத்தையும் வகுத்தார்.

அதிலே ஆனையிறவையும் கிளிநொச்சியையும் துண்டிப்பதற்கான திட்டத்தை தளபதி கேணல் பால்ராஜிடம் கொடுத்தார். அடுத்து முகாமை தாக்கியழிப்பதற்கான திட்டத்தை என்னிடம் தந்தார்.

இதிலே முகாமை தாக்கியழிப்பதற்கான திட்டத்தின் படி ஒன்பது பாதைகளால் முகாமுக்குள் இறங்கினோம். இதைவிட ஊடறுப்பதற்கான திட்டத்தின் படி நான்கு பாதைகளால் இறங்கும்திட்டம் ஒரு தனி நடவடிக்கையாக நடைபெற்றது. இதன்படி 1998-09-26 அதிகாலை 1.20 இற்கு சண்டை ஆரம்பிக்கப்பட்டது. சண்டைக்கான நகர்வுத் திட்டங்களில் எந்த வித சிக்கல்களும் ஏற்படவில்லை எமது திட்டத்தின்படி குறித்த நேரத்தில் சண்டையை ஆரம்பித்தோம். அதன்படி எல்லா முன்அரண்களும் கைப்பற்றப்பட்டன. அதன் பின் அன்று காலையில் எம்மால் கைப்பற்றப்பட்ட நான்கு பகுதியாலும் இராணுவத்தினர் முறியடிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப்பகுதிகள் எல்லாம் வெளியான பகுதியாக இருந்தன. இராணுவத்தை பொறுத்தவரையில் டாங்கிகள், விமானப்படையின் ஆதரவுகள், ஆட்லறி சூட்டாதரவுகள் எனப் பல ஆதரவுகளோடு நாங்கள் கைப்பற்றி நுளைந்த பகுதிகள் எல்லாவற்றையும் முறியடித்து எமது அணிகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை காலை 5.30 தொடக்கம் மிகத் தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கினர். அந்தத் தீவிர நடவடிக்கையால் நாங்கள் பிடித்த கணிசமான நகர்வுப் பாதைகள் எங்களிடமிருந்து விடுபட்டுப் போய் விட்டன. அத்தோடு எதிரிவிமானப்படை ஆட்லறிகளாலும் தொடர்ந்து எங்கள் மீது தாக்குதலை நடத்தி நெருக்கடியை ஏற்படுத்தத் தொடங்கினான். இந்த வேளையில் கிளிநொச்சித்தளத்தை மீட்டே தீரவேண்டுமென்ற நோக்கத்தோடு எமது அணிகளும் மூர்க்கமாக சண்டையில் ஈடுபட்டன. அதேநேரம் எதிரியும் மூர்க்கமாகத் தான் சண்டையிட்டான். 27 ஆம் திகதி பகல் முழுவதும் நடைபெற்ற சண்டை நாங்கள் பிடித்த பகுதியை எதிரி கைப்பற்றுவதும் எதிரி பிடித்த பகுதியை நாங்கள் கைப்பற்றுவதுமாகத்தான் அன்று முழுவதும் நாங்கள் நுழைந்த பகுதிக்குள் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாங்கள் 27ஆம் திகதி எதிரியின் முகாம் பகுதிக்குள் முழுமையாக நுழையவில்லை. முன்னரங்கநிலைகளை உடைத்துத்தான் சண்டையிட்டுக் கொண்டிருந்தோமே தவிர மையப்பகுதியை நோக்கிய நகர்வை எதிரி முடக்கியிருந்தான்.

இதேவேளை கிளிநொச்சிக் குளத்துப் பகுதியால் இறங்கி ஒரு இரகசிய நகர்வை மேற்கொண்ட அணியின் தொடர்பு 27 ஆம் திகதி 12 மணியோடு அற்றுப் போனது. அதேநேரத்தில் கேணல் விதுசாவின் அணிகள் இறங்கிய பாதைகளில் ஒரு சில பாதைகளின் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டன. அதே போன்று தளபதி ராமின் பகுதியால் இறங்கிய பாதைகளில் ஓடுபாதை தான் தக்கவைக்கப்பட்டிருந்தது. அவ்வளவு கடும் இறுக்கமாக உக்கிர சண்டை நடந்தது. 27 ஆம் திகதி சண்டை முழுவதும் நாங்கள் உள் நுழைந்த பாதைகளை தக்க வைப்பதற்காகத்தான் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம் இதிலே நாங்கள் விழவிழ அந்த இடத்தை பிடிப்பதும் தக்க வைப்பதுமாக வர்ணிக்கக்கூட முடியாத அளவு இறுக்கமான சண்டை நடந்தது. அன்று நாங்கள் குறிப்பிட்ட பாதைகளை தக்க வைத்துக்

இ.சசிக்குமார்

கொண்டு 27 ஆம்திகதி அதிகாலையில் நாங்கள் ஒரு அதிரடியான முன்னேற்ற முயற்சியையும் மேற்கொண்டவாறு கிழக்குப் பகுதியில் கனரக ஆயுதங்களையும் பாவித்துக் கொண்டு தெற்குப் பகுதியில் கட்டடங்கள் ஓரளவு அமைந்திருந்ததனால் நகர்விற்கு ஓரளவு சாதகமாக இருந்தது. அந்தப் பகுதியால் நகர்வு மேற்கொண்டோம். அந்தப் பகுதியாலும் நான்கு பாதைகளை எடுத்திருந் தோம். அதிலே இரண்டு பாதைகள்

(1_ஆம் பக்கம் பார்க்க)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## முயன்றால் முடியாததா



**த**மிழர் தாயகத்தில் இலைமறை காயாக இருக்கும் வீரர்களை இனம் கண்டு விளையாட்டில் உச்ச நிலையை அடையக் கிராம ரீதியான பல விளையாட்டுக் கழகங்கள் முன்வருவது பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியது என்கிறார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.

இவரின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அண்மையில் நிறைவு பெற்ற நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் மாவீரர்கள் நினைவாக நடாத்திய மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்து, பூப்பந்து போட்டிகள் ஆரோக்கியமானதும், விளையாட்டு ரசிகர்களுக்கு விருந்தாகவும் அமைந்திருந்தது.

இதில் கழகரீதியாகப் பூப்பந்து போட்டி அறிமுகப் படுத்தப்பட்டமை ஒரு முன்னோடிநடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

விளையாட்டுப் போட்டி என்று வரும் போது கால்பந்து, துடுப்பாட்டம், கரப்பந்து, வலைப்பந்து என்ற எல்லைக்குள்ளேயேகழகங்கள் நின்றுவிடுவதே இதுவரை நடைபெற்றுவந்தது.

இது ஏனைய விளையாட்டுக்களை அறிய முடியாத தன்மை ஏற்படுவதுடன் அவற்றில் நாட்டமுள்ள வீரர்கள் தமது திறமையை நிரூபிக்கக் களம் இல்லாது அவற்றைக் கைவிடும் நிலையே இருந்து வருகின்றது.

எனவே கழகங்கள் போட்டிகளை நடாத்தும் போது தனிநபர் போட்டிகளை தெரிவு செய்து அவர்களுக்கும் வாய்ப்பை வழங்க முன்வர வேண்டும். அந்த வகையில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் முயற்சி பாராட்டுக்கு ரியது.

இது இவ்வாறிருக்க ஒரு காலத்தில் கால்பந்தில் நாட்டம் செலுத்திய வன்னி மாவட்ட கழகங்கள் துடுப்பாட்டத்தில் அதீத அக்கறை காட்டி வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இதில் பல அணிகள் நிரம்பவே வளர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அவர்களின் ஆடும் திறன் பார்வையாளர்களைப் பரவசப் படுத் துவதுடன் வெற்றிக்காக அவர்கள் போராடும் விதம் சர்வதேச போட்டிக்கு ஒப்பானது போன்றது என்று கூறினாலும் தவறாய் இருக்காது.

அதாவது துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு போன்றவை சில அணிகளில் உச்ச திறனைக்கொண்டுள்ளது. இதுவே கிரிக்கெட்டின் வெற்றியின் இரகசியமும் கூட.இந்த வகையில் தருமபுரம் இளந்தாரகை அணி வன்னியில் பலம்பொருந்திய அணியாகத் திகழ்கின்றது. அந்த அணி கடந்த நான்கு மாதங்களில் நடை பெற்ற போட்டியில் மூன்று முறை சம்பியனாகத் தெரிவானது. அதே போன்று விசுவமடு தோழர் கள் அணி பலமுறை இறுதிப் போட்டிக்கு வந்தும்சம்பியனாகும் வாய்ப்பைத்தவறவிட்டது. ஆனால் வெற்றிக்காக அவர்களும் போராடியுள்ளார்கள்.

இந்த நிலையில் உச்ச திறனை வெளிப்படுத்தும் அணிகள் விரைவாக கடினப்பந்து போட்டிகளுக்குத் திரும்ப வேண்டும் என்கிறார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.நிச்சயமாக இது முடியாத ஒன்றல்ல. நிறையவே திறமையான வீரர்கள் உள்ளனர். எனவே அவர்களுக்கு கைகொடுத்து முன்னேற்றுவது ஏனையவர்களைவிட அந்தந்த கிராமமக்களின் கடமையாக மாறவேண்டும்.

இது இவ்வாறிருக்க சர்வதேச போட்டிகளில் ஆடுகளத்தின் தன்மை போட்டியின் போக்கைத்தீர்மானிப்பது என்பது உண்மையான கருத்தே. ஆனால் சாதாரண மென்பந்து ஆடுதளம் போட்டியின் போக்கைத் தீர்மானிப்பதற்கு வாய்ப்புக் குறைவாகவே உள்ளது.

ஆனால் மேற்படி சுற்றுப் போட்டிகளின் வெற்றி தோல்விகளை ஆடுதளம் தீர்மானிப்பது போல அமைந்திருந்தது. அதாவது நேர்த்தியாக வீசப்பட்ட பந்து உதிரிகளாக மாறியதும், துடுப்பாட்டவீரர்களை ஏமாற்றியதையும் காணக் கூடியதாக இருந்தது.

இதற்கு ஆடுதளம் சரியான முறையில் அமைக்கப்பட்டு செப்பனிடப்படாததே காரணம். எனவே போட்டியை நடத்துவோர் இதில் கவனம்செலுத்தி போட்டியாளர்களுக்கு ஒத்துழைப்பதுடன் அதில் நிறையவே கவனம்செலுத்த வேண்டும்.

மொத்தத்தில் அருமையான ஆட்டத்தை வெளிப்படுத்தும், கிரிக்கெட் வீரர்களே விரைவாக கடினப்பந்து போட்டிக்கு மாறி திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## இனியும் முன்வருவார்களா?

விளையாட்டு என்பது இன்று உலகையே ஆக்கிரமிக்கின்ற. உலகமே அதனை நோக்கிச் செல்கின்றதொரு நிலைக்கு மாறியுள்ளதெனில் மிகையில்லை.

இந்தவகையிலே விளையாட்டு தொழிலாகவும் பரிணமித்து நிற்கின்றது.

இதற்கு, அரச, அரச சார்பற்ற திணைக்களங்களின் பங்கு பாரிய முக்கியத்துவம் மிக்கதொன்றாக மாறியுள்ளதே விளையாட்டு இன்று வளர்ச்சி பெற்று நிற்பதற்கும், உலகை ஆக்கிரமித்து நிற்பதற்கும் காரணமா[illegible]ம் அதாவது, திணைக்களங்கள் / நிறுவனங்கள் விளையாட்டுக் கழகங்களை நடாத்துவதுடன், விளையாட்டு வீரர்களை உள்வாங்கி அவர்களுக்கான சகல வசதி, வாய்ப்புக்களைப் பூரணமாக நிறைவேற்றுவதே காரணமாகின்றது.

இதனால், வீரர்கள் விளையாட்டில் சாதிக்க முற்பட்டு நிற்பதையும், விளையாட்டுக்கள் சர்வதேச ரீதியில் வளர்ச்சி பெற்று புதிய வடிவம் பெற்று நிற்பதையும் கூறித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை.ஆனால் இதற்கு ஏற்றதானதொரு நிலை தற்பொழுது தமிழீழத்தில் காணப்படவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தகைய நிலை அதிகமாகக் காணப்படுகின்றபோதிலும் தமிழீழ விளையாட்டுத்துறையின் துரித நடவடிக்கைகள் காரணமாக தற்போது விளையாட்டு புத்துயிர் பெற்று வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, இந்த நிலையை மேலும் வலுப்பெறச் செய்ய அரச, அரச சார்பற்ற திணைக்களங்கள் முன்வருவார்களேயானால் விளையாட்டு முழு வடிவம் பெறுவதற்கும் வீரர்கள் விளையாட்டை நோக்கி நகர்வதற்கும் உந்து சக்தியாக இருக்கும் எனவே, இதற்கு அவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இன்றுபிரகாசமாகவே உள்ளது.



ஏனெனில், அண்மையில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக் களம் நடாத்திய மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை முன்னோடி நடவடிக்கையாக கொள்ளலாம். அதாவது, அரச, அரசசார் பற்ற திணைக்களங்களுக் கிடையிலான மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் நடாத்தி வருகின்றது.

இதில் பத்துக்கும் மேற்பட்ட திணைக்களங்கள் ஆர்வத் துடன் பங்கு கொண்டதை அவதானிக்க முடிந்தது.

இது விளையாட்டின் மீது அவர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தினாலும் தற்போது தமிழீழ விளையாட்டுத்துறையினரால் முன்னெடுத்துச் செல்கின்ற நடவடிக்கைக்கு உந்து சக்தியாக தங்களை மாற்றிக்கொள்ள விளைந்துள்ளமை பாராட்டுக்குரியது.



அதாவது, எவ்வாறு ஆர்வத்துடன் மேற்படி சுற்றுப் போட்டியில் பங்கு கொண்டார்களோ அவ்வாறே இவர்கள விளையாட்டை வளர்க்க முன்வருவார்களானால் அது விளையாட்டுதுறைக்கு ஆரோக்கியம் மிக்கதொன்றாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.தமிழீழத்தைப் பொறுத்த வரையில் பெற்றோர்களிடம் முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதாவது, பிள்ளைகள் படித்தால் மட்டும் போதும் என்ற நிலையே தற்பொழுதும் பெற்றோர் மத்தியில் காணப்படுகின்றது.

இதை முற்றுமுழுதாக இல்லாதொழிக்க வேண்டுமானால் பெற்றோர் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். இதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு இருக்குமானால் விரைவில் மேற்படி நிலைக்கு விளையாட்டு பரிணமித்து நிற்கும் எனலாம்.அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கழகங்களை நடாத்தி தொழில் ரீதியாக விளையாட்டை வெளிக்கொண்டுவருவார்களேயானால் விளையாட்டு உச்ச நிலையை அடைவது தவிர்க்கமுடியாததாக இருக்கும்.

இது தமிழீழ விளையாட்டுத்துறையின் நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாகவும், தமிழீழத்தில் விளையாட்டு ஆரோக்கியமான, தொழில் ரீதியிலான நிலைக்குமாற காரணமாகவும் அமையும்.

எனவே, இதை உணர்ந்து மேற்படி அரச, அரச சார்பற்ற திணைக்களங்கள் செயற்பட முன்வருவார்களேயானால் ஆரோக்கியமான வியைாட்டு சமூகம் உருவாகுவது திண்ணம்.

பூ.சுபானந்த்

## வானையும் முட்டலாம் ஆனால் அங்கேயே தங்கமுடியுமா?

ஆஷஸ் டெஸ்ட் தோல்வி அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை பாடாய்ப்படுத்தி வருகிறது. ஒரு புறம் ஒட்டு மொத்த அணியையும் மாற்ற வேண்டுமென்ற முன்னாள் வீரர்களின் கோரிக்கைகள் மறுபுறம் ரிக்கி பொண்டிங்கின் பதவி பறிக்கப்பட வேண்டும். பயிற்சியாளர் புக்கானனை நீக்க வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் இப்படி நாளுக்கு நாள் ஒவ்வொரு பிரச்சினைகள் முளைத்த வண்ணமுள்ளன.

இது போதாதென்று தற்போது புதிதாக வந்துள்ள தகவல் அவுஸ்திரேலியாவின் மானத்தையேவாங்குவதாய் உள்ளது.

இங்கிலாந்து- அவுஸ்திரேலிய இணையத்தளங்களில் இந்த பரபரப்புதகவல் வெளியாகியுள்ளது.

தங்களின் முக்கியமான ஒவ்வொரு தொடரின்போதும் பந்தயம் கட்டும் இந்த இணையத்தளங்கள் அவுஸ்திரேலியாவின் வீழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

இது சூதாட்டம் என்றுநினைத்து விடாதீர்கள் (ஐ.சி.சி) சர்வதேச கிரிக்கெட் சபையால் அங்கீகாரம் பெற்ற பந்தயப் போட்டியாகும், இது எதிர்வரும்வாரம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக 11 பேர் அணிமற்றும் அவுஸ். அணி கலந்து கொள்ளும் சுப்பர் சீரிஸ்தொடர்பானதாகும். அவுஸ்திரேலியா- உலக 11பேர் அணிகள் மோதும் சுப்பர் சீரிஸ் தொடரில் மூன்று ஒருநாள் போட்டிகள் ஆறுநாள் கொண்ட டெஸ்ட் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளன.



உலக 11 பேர் அணியில் ஆஷஸ் வெற்றிக்கு முக்கிய காரணமான அன்ரு பிளிண் டொப் இடம்பெற்றுள்ளார். இவரை தவிர பிறைன் லாரா, முத்தையா முரளிதரன் போன்ற நட்சத்திர வீரர்கள் பலர் உள்ளனர் இப்படி பலம்மிக்க அணியை ஆஷஸ் தோல்விக்கு பின் அவுஸ் திரேலிய அணியால் வெல்ல முடியாது என ரசிகர்கள் நினைத்து விட்டார்கள் போலும்.

காரணம் பந்தயம், போட்டி ஆரம்பமாகி மூன்று வாரங்களாகியும் அவுஸ்திரேலிய அணி வெல்லும் என்று வெறும் ஆயிரம் ரூபாவுக்கு குறைவாகவே கட்டப்பட்டுள்ளதாகவும் உலக11 பேர் அணிவெல்லும் என்று நான்குஇலட்சத்துக்கும் அதிகமான பணம் கட்டப்பட்டுள்ள தகவலே அது.


இது முதன்முறையாக அவுஸ்திரேலிய அணிக்காக கட்டப்பட்டமிகக் குறைவான பணமாம்.


ஒரு தொடரில் ஏற்பட்ட தோல்வியே அவுஸ். அணியின் தலைவிதியை தலைகீழாக மாற்றிவிட்டது என்றால் ஏனைய அணிகளை சொல்லவா வேண்டும். .இந்த நிலையில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இன்றும்அவுஸ்திரேலிய அணியே உலகின் சிறந்த அணி என்கின்றார்.


கடந்த இருபது ஆண்டுகளாக அவர்களின் ஆட்டம் மற்றைய அணிகளை விடமாறுபட்டது.அத்துடன் துடுப்பாட்டம் களத்தடுப்பு பந்துவீச்சு எனஅனைத்திலும் வேகம் கொண்டவர்கள்.இதற்கும் மேலாக வோர்ன்-மெக்ராத் நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்து அணியை வெற்றிக்கு அழைத்துசெல்வதாகவும் மனந்திறக்கிறார்.

எது எவ்வாறு இருப்பினும் ஆஷஸ் தோல்வி அதற்குஒரு கறையாகவே மாறிவிட்டது. இதைப்போக்குவது எப்படி?மீண்டும் உலக சம்பியனாக, வீழ்த்தமுடியாத அணியாக வலம் வருவது எப்போது இதற்கெல்லாம் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் விரைவில் பதிலளிப்பார்களா?

இ. கிரான்


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30 உலகின் மனித நாகரிக விழுமியங்களை
படுகுழியில் புதைத்து வரும் சிங்கள இனவாதிகள் முன்னால் நாகரிகமாக நாம்
வாழ தனியான எம்முடைய தாயகத்தை சர்வதேசமே அங்கீகரிக்க கோரி
பொங்கும் தமிழ்மக்களின்...
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
விடுதலையின் தாகத்துடனும் பசியுடனும்
தமிழர் நாம் விழிகள் மூடிக்கிடக்கும் தருணம்
அல்ல இது எம் விழிகளை எரித்தோர் முன்னால்
விழிக்கும் நேரம் விடியல் நெருங்குகிறது
விடுதலைத் தீப்பொறி அனலாக..
இனவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டோர் முதல்
உயிர் உள்ளோர் வரை கேட்கும் உரிமையின் மந்திரம்
விடுதலை,விடுதலை,விடுதலை உரத்து கோசம் இட்டு
எழுந்து வாருங்கள்.
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்-காரைநகர்


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
அடிமைகள் அல்ல நாம்-எம்மை
அடித்தவர் முன்னும் அழித்தவர்முன்னும்
எழுந்து நிற்கும் இனம் தமிழினம்.
எமக்கென்று ஒரு நிலம் உண்டு
எமக்கென்று ஒரு கடல் உண்டு
எமக்கென்று ஒரு மொழி உண்டு
எமக்கென்று ஒரு முப்படை உண்டு
எமக்கென்று ஒரு கட்டமைப்பு உண்டு
எமக்கென்று ஒரு தலைவன் உண்டு
இவை அனைத்தும் செவ்வனே இயங்குகின்ற
தமிழீழ தனியரசை சர்வதேசமே உடனே
அங்கீகரிக்க வலியுறுத்திய தமிழ் மக்களின்
எழுச்சிக் குரலாய்...
அலை அலையாய் தமிழினமே
அணிதிரண்டு வா...
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
தீவகப்பகுதி தெற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்-வேலணை.
(சீ.12918)


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
காலம் கனிந்துள்ள
இவ்வேளையில்
கடல்போல் பொங்கி எழுவோம்
சர்வதேசத்திடம்
அங்கீகாரத்தைக் கோருவோம்
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
தமிழினமே பெரும் வெள்ளமென
அணிதிரண்டுவர உங்களை அழைக்கின்றோம்.
தென்மராட்சி கிழக்கு பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்.
(சி.12916)


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
எங்களின் தாயகத்தில் உள்ள தமிழீழ தனி அரசை சர்வதேசமே
அங்கீகரிக்க வற்புறுத்தி பொங்கும் கடலாய் தமிழ்மக்களின்
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
ஒரு தனியரசுக்குரிய அனைத்து அதிகார
அலகுகளுடன் கட்டமைப்புக்களுடன்
நடைமுறையில் உள்ள தனி அரசை
அங்கீகரிப்பதில் சர்வதேசமே
உனக்கு என்ன தடை
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
விடை சொல், உன் பதிலிலே தங்கியுள்ளது
தமிழ் மக்களின் பூரண விடுதலை
வலிகாமம் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம் -சங்கானை
(சி.12917)

## Job Advertisement

# Save the Children
in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organization working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

Vacancy exists for the following position.

**Position specifications**

| | |
|---|---|
| Job Title | **Partnership Development Manager - Livelihoods** |
| Reporting to | **District M ger** |
| Grade | **E** |
| Location | **Kilinochchi** |
| Salary | **Grade 1** |

**Job purpose**

The Partnership Development Manager (PDM) - Livelihoods is responsible for the development, implementation and monitoring of programmes to achieve SCiSL's objectives of the Livelihoods Operational Plan through partner organisations. The PDM is also responsible for playing a proactive role in advocacy at different levels. The PDM eventually line manage (a) Partnership Management Offic s).

**General Responsibilities**

- Generate regular updates on the livelihood situation in the district and in the SCiSL operational areas.
- Supervise regular data and information collection and analysis.
- Facilitate SCiSL Livelihoods assessments in the district
- Produce a situation analysis in relation to livelihoods with a special focus on children for identifying and prioritising development needs. This entails working closely with other PDMs and PMOs to develop an overall understanding of livelihoods issues affecting children.
- In close co-operation with the District Manager, identify suitable partners for achieving the
- SCiSL strategic objectives.
- Identify appropriate programmes with partners & programmes for direct implimentation in line with SCiSL's Country Strategy Plan and operational plan, and develop proposals in co-operation with partners.
- Develop strategic and operational plans for direct implimentation.
- In consultation with partners, develop and implement appropriate engagement and exit strategies for projects / programmes.
- Coordinate livelihood programme activities and ensure that best practices are documented and shared with other sectors & within SCiSL. This includes incorporating feedback from monitoring and evaluations visits into programme development and implementation.
- Prepar reports to meet SCiSL and external donor requirements.
- Identify training needs / capacity building measures for partners in technical areas related to livelihoods and plan for relevant technical input.
- Work with efficient manner of adopting the Local Community system.
- Keep abreast of other stakeholders' involvement in the livelihoods sector including approaches and assessment tools used by key agencies.
- Networking with relevant agencies and government departments working on Livelihoods.
- Represent SCiSL in relevant fora at district level.
- Proactively identifying opportunities for advocacy at different levels.
- Prepare district operational plans and budgets when appropriate

Any other related tasks assigned by the Line Manager from time to time.

**Person Specifications**

*Essential*

- Post-graduate / graduate degree in social sciences or related discipline and preferably about 5 years of experience in the area of livelihoods.
- Demonstrated experience in developing & managing partnerships with NGOs.
- Experience in project planning, implementation, monitoring and evaluation
- Excellent skills in monitoring implementation of programme activities
- Good understanding of livelihood issues
- Good analytical skills
- Strong interpersonal and liaison skil d ability to network with diverse stakeholders
- Demonstrated experience in usin cipatory assessment tools (PRA, PLA, RRA).
- Command of one local language and good written and spoken English
- Ability and willingness to travel
- computer literacy in WinWord, Excel and email software

Desirable

- Knowledge of right based programming approaches

**Position specifications**

| | |
|---|---|
| Job Title | **Project Development Officer (<Thematic area>)** |
| Reporting to | **Partnership Development Manager** |
| Grade | **D** |
| Location | **Kilinochchi** |
| Salary | **Grade 1** |

**Job purpose**

Project Development Officer (PDO) is responsible for the day to day management of her / his assigned projects. The PDO is line managed by a Programme Specialist (PS). The PDO is also expected to take initiatives to improve the quality of the same projects.

**General Responsibilities**

- Providing relevant inputs for development of strategic and operational plans for the projects.
- Assisting in situation analysis for identifying and prioritising development needs in the context of child rights and the project(s).
- Assisting in developing qualitatively improved approaches to work.
- Assisting in developing and implementing appropriate engagement and exit strategies for projects.
- Assisting in developing proposals for approval.
- Responsible for monitoring of projects to ensure achievement of objectives.
- Producing high quality programme reports and other periodic reports sent to PS.
- Assist in research and advocacy initiatives.
- Sharing of learning and insights obtained through projects / programme work with other relevant staff.
- Participate in developing thematic expertise.
- Any other relevant tasks delegated by the Line Manager from time to time.

**Administrative Responsibilities**

- Assisting in finalizing project budget(s) and monitoring the same.
- Prepare periodic reports on budgets and expenditure of individual projects.
- Assist in providing training / facilitating workshops as required for internal HRD activities.

**Authority**

As delegated by her/ his line manager from time to time.

**Person Specifications**

*Essential*

- Graduate degree in social sciences or equivalent and preferably with at least 3 years of experience in development work.
- Good analytical skills and field experience in programme management.
- Understanding of development issues related to children.
- Ability to innovate along with a positive attitude to learn from communities.
- Skills related to participatory methods, computer literacy and financial management.
- Good communication skills both written and oral. Fluency in English.
- Skills in report writing.
- Good interpersonal and liaison skills.
- Ability and willingness to travel.

*Desirable*

- Exposure to development interventions in the area of child rights.
- Tri-lingual

| Job Title | Project Development Assistant - Livelihoods |
|---|---|
| Reporting to | Partnership Development Manager- Livelihoods |
| Grade | C |
| Location | Kilinochchi |
| Salary | Grade 1 |

**Job Purpose:**

The PDA will assist in the Organization, Assessment, documentation and Community mobilization for reunification of separated, unaccompanied children. Moreover, the PDA will avail day to day cooperation with the family and partners doing social work in the community in order to provide services to make the family self supportive.

**Qualifications and experience:**

**Main Responsibilities:**

1. To take part in registration and family/caregivers assessments in order to give recommendation when it comes to reunification or placements in services or alternative care.
2. Assisting in situation analysis for identifying and prioritizing needs in the community, including security threats.
3. Assisting in identifying relevant partners to work with in order to contribute to the integration process.
4. Assisting the Project manager in developing qualitatively improved approaches to work.
5. To assist practically and emotionally in the family tracing and reunification in collaboration with partners (CRPO, Pos)
6. To assist in strengthening the family's abilities' to reintegrate separated and unaccompanied children in the family and in the community by home/follow up visits.
7. Sharing of learning and insights obtained through project/partner/ programme work with other relevant staff.
8. Any other relevant duties in line with the job purpose delegated by the line manager from time to time.

**Administrative Responsibilities:**

- Prepare and submit periodic activity reports.
- Assist in providing training/facilitating workshop as required.

**Authority:**

- As delegated by her/his line-manager from to time.

**Person Specifications:**
**Essential**

- Preferably educated to a University level or equivalent with 2 years experiences of NGO work.
- Good listening skills and field experiences in working with families.
- Understanding of separation, unaccompanied children and family reunification.
- Ability to innovate along with a positive attitude to learn from community.
- Skills related to good communication, to work in partnership, participatory methods and liaison.
- Willingness to work in community setting.
- Besides skills in report writing good written and oral communication skills.
- Ability and willingness to travel.
- At least valid Motor Bick driving licence for riding motor Bick.

**Desirable:**

- Experience in working with partners.
- Bi-lingual (Tamil, English)

**A highly competitive remuneration package awaits the selected candidates.**

The above positions would be initially for a period of one year.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **03rd of October 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**

**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please.**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony** and **Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி-12927)

# இயலவிற்பனை

*காலம்:–2005. 09. 29*

*இடம்:– மல்லாவி /மல்லாவி சந்தை முன்பாக உள்ள கட்டடத்தில்*

**பொருள்விரிப்பு:–**

- *இலத்திரனியல்*
- *அழகுசாதனம்*
- *புடைவை வகை*
- *ஊர்தி உதிரிப்பாகங்கள்*
- *மேலும் பல்வகைப் பொருட்கள்*

*கவனிப்புக்கு:–2005. 09. 27–2005. 09. 28 ஆம் நாள் வரை பொருட்களை இயல விற்பனை நிலையத்தில்பார்வையிடலாம்.*

(சி12924) **மேலதிக விபரம் நாளை எதிர்பாருங்கள்**

# நெல் விற்பனை

மேற்படி எமது சங்கத்தினால் 2004/2005 கால போகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள முதல் தரமான சம்பா நெல் 58989 கிலோ கிராம், வெள்ளை இன நெல் 125786 கிலோகிராம் விற்பனை செய்வதற்காகக் கேள்வி கோரப்படு கின்றது. நெல்லைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கேள்விகளைத் தலைவர், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு 12.10.2005 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பித்தல் வேண்டும். 15.10.2005ஆம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்வி திறந்து ஆராயப்படும். அவ்வேளை கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளித்திருத்தல் வேண்டும். நெல்லை பார்வையிட விரும்புவோர் நெடுங்கேணியிலுள்ள எமது களஞ்சியத்தில் காரியாலய நாட்களில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள்**

01) சம்பா, வெள்ளை ஆகியவற்றுக்குத் தனித்தனியாகக் கேள்விக்கூறு சமர்ப்பித்தல் வேண்டும்.

02) நெடுங்கேணிக் களஞ்சியத்தில் வைத்து நெல்லைப் பொறுப்பேற்கும்போது ஒரு கிலோ நெல் தங்களால் கொள்வனவுசெய்யக் கூடிய விலை.

03) தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பெறுமதியின் அரைப்பங்கைத் தெரிவு செய்யப்பட்ட இருதினங்களுக்குள் பணமாக அல்லது வங்கி உண்டியலாகத் தலைமைப் பணிமனையில் செலுத்துவதுடன், ஏற்றப்படும் நெல்லிற்கான பெறுமதி பணமாகஅல்லது வங்கி உண்டியலாக செலுத்தி இறுதியில் கணக்குச் சீராக்கம்செய்யப்பட வேண்டும்.

04) பத்துத் தினங்களுக்குள் முழு நெல்லும் அப்புறப்படுத்துதல் வேண்டும்.

05) கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதி முடிவாக அமையும்.

06) நெல் ஏற்றப்பாரவூர்தி தேவைப்படுவோருக்கு பாரவூர்தி வாடகைக்கு விடப்படும்.

**தலைவர்,**
**வ.வ.ப.நோ.கூ.சங்கம்,**
**நெடுங்கேணி**

(சி.12[illegible])

# யங்ஹென்றிஸ், சென்தோமஸ் அணிகள் கால் இறுதியாட்டத்திற்கு தகுதி

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14 ஆவது ஆண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மாதகல் சென்தோமஸ், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு எல்லாளன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய இளம்தென்றல் 4-3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இவ்வாட்டம்ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இருஅணி வீரர்களும் கோல் பெறுவதற்கு பல முயற்சிகள் எடுத்த போதிலும் கோல் பெறாத நிலையில் சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரு அணியினருக்கும் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கான மேலதிக உதை "பெனால்ட்டி" வழங்கப்பட்டதில் இளவாலை யங்ஹென்ரீசியன் விளையாட்டுக்கழகம் 4-3 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

இதேவேளை மாலை மூன்று மணிக்கு நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில் வல்வை நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மாதகல் சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

போட்டி ஆரம்பிக்கப்பட்ட நேரம் தொடக்கம் இரு அணியின் முன்னிலை வீரர்கள் கோல் அடிப்பதற்கு பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். இருந்த போதும் ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் சென்தோமஸ் விளையாட்டுக் கழக முன்னிலை வீரர் தனது அணிக்காக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படையத் தொடங்கியது. ரசிகர்களின் பலத்த கரகோஷத்துடன் ஆட்டம் தொடர்ந்து விறுவிறுப்பாக நடைபெற்றது.

1-0 என்ற கோல்கணக்கில் முதல் பாதியாட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டம் தொடங்கி ஏழாவது நிமிடத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக வீரர் கிடைத்த பந்தை மிகவும் சாதுரியமாக பயன்படுத்தி கோல் ஒன்றை அடித்தார். ஆட்டம் சமநிலை அடைய ஆட்டத்தின் போக்கு மிகவும் வேகமடையத் தொடங்கியது. இரு அணிவீரர்களும் சளைக்காமல் கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆட்டத்தில் 49 ஆவது நிமிடத்தில் சென்தோமஸ் விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் நவசக்தி விளையாட்டுக்கழக தடுப்பாட்ட வீரர்களின் தடுப்பைத் தகர்த்தெறிந்து மிகவும் நேர்த்தியான முறையில் அழகான கோல் ஒன்றை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்ததாயினும் 2-1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

# முல்லை மாவட்ட பிரதேச செயலக பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் 24,25 ஆகிய தினங்களில் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற பெரு விளையாட்டுக்களில் ஆண்களுக்கான நிகழ்வுகளில் கபடிப் போட்டியில் கரைதுறைப்பற்று முதலாம் இடத்தையும், மாந்தை கிழக்கு இரண்டாம் இடத்தையும், எல்லே போட்டியில் கரைதுறைப்பற்று முதலாம் இடத்தையும், மாந்தை கிழக்கு இரண்டாம் இடத்தையும், கரப்பந்துப் போட்டியில் கரைதுறைப்பற்று முதலாம் இடத்தையும், மாந்தை கிழக்கு இரண்டாம் இடத்தையும், மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் புதுக்குடியிருப்பு முதலாம் இடத்தையும், துணுக்காய் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான நிகழ்வுகளில் கரப்பந்துப் போட்டியில் கரைதுறைப் பற்று முதலாம் இடத்தையும், மாந்தை கிழக்கு இரண்டாம் இடத்தையும், எல்லே போட்டியில் கரைதுறைப் பற்று முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு இரண்டாம் இடத்தையும், கபடிப் போட்டியில் கரைதுறைப்பற்று முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு இரண்டாம் இடத்தையும், வலைப் பந்துப் போட்டியில் புதுக்குடியிருப்பு முதலாம் இடத்தையும் கரைதுறைப்பற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இறுதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற உதைபந்து இறுதிப்போட்டியில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு இரு அணிகளும் ஒவ்வொரு கோல் போட்டதனால் போட்டி சமனிலையில் முடிவுற்றது. போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டது. ஏழு பெரு விளையாட்டுக்களில் வெற்றி பெற்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## பைந்தமிழ் வி.கழகம் நடாத்தும் மென்பந்துப் போட்டி 30ஆம் திகதி

கிராம மாவீரர்கள் நினைவாக ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக நான்கு நாட்கள் இப்போட்டி நடைபெறும் எனவும் கழகத்தினர் அறிவித்துள்ளனர். போட்டியின் ஆரம்ப நாளன்று மைதானப் பெயர் பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆவரங்கால் மத்திய வி.கழகம் சம்பியன்

இளவாலை வெண்புறா விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட மாவட்டரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நேற்று முன்தினம் வெண்புறா விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை நான்கு மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 3-0 என்ற நேர் சுற்றுகளில் 25.23, 25.19, 25.20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாக மத்திய விளையாட்டுக்கழக வீரர் செந்தூரன் தெரிவு செய்யப்பட்டார். (கீ)




# தாயக வீரர்கள் கௌரவிப்பு விழா

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் அகில இலங்கை ரீதியில் வெற்றிபெற்ற தாயக வீரர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறும் இந்நிகழ்வு தூயவன் அரசறிவியல் கல்லூரியில் காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளதாக விளையாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# சப்பலை கடுமையாக சாடும் ஹர்பஜன் கங்குலி அற்புதமான தலைவராம்

சப்பலுக்கு எதிராகவும், கங்குலிக்கு ஆதரவாகவும் ஹர்பஜன்சிங் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் பதவியிலிருந்து கங்குலியை நீக்கவேண்டும் என்று






ஏ-1 கார் பந்தயம் முதன் முறையாக லண்டனில் நேற்று முன்தினம் நடந்தது. மொத்தம் 25 வீரர்கள் கலந்து கொண்ட இப் போட்டியில் பிரேசிலின் நெல்சன் பிக்குயிட் (ஜூனியர்) சம்பியன் பட்டம் வென்றார்.

பயிற்சியாளர் சப்பல் கிரிக்கெட் சபையிடம் புகார் செய்திருக்கிறார். இவர்களுடைய மோதலில் மற்ற வீரர்கள் கருத்து எதுவும் சொல்லாமல் மௌனமாக உள்ளனர். நேற்று முன்தினம் முதன் முதலாக கங்குலிக்கு ஆதரவு தெரிவித்து இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் கருத்துத் தெரிவித்துள்ளார்.

என்னை பொறுத்தவரை கங்குலி அற்புதமான தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். அவர் தலைவராக இருந்து பல வெற்றிகளை இந்திய அணிக்கு ஈட்டித்தந்துள்ளார்.

கங்குலி தனது அணித்தலைவர் பதவியை காப்பாற்றிக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றார் என்றும் இதற்காக அவர் அணி வீரர்களிடையே பிளவை ஏற்படுத்துகிறார் என்றும் சப்பல் சொல்லியிருப்பது கொஞ்சம் கூட உண்மை இல்லாதது. நான் கங்குலி தலைவராக இருந்ததில் ஐந்தாண்டு காலம் இந்திய அணிக்காக விளையாடியுள்ளேன் அவர் அப்படி தவறாக எப்போதும் நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. மற்ற வீரர்களை ஊக்கப்படுத்துவதில்தான் கவனம் செலுத்துவார். இதுவரை இந்திய அணி ஏதாவது சாதித்திருக்கிறது என்றால் அந்தப் பெருமை கங்குலியையே சாரும் இவ்வாறு ஹர்பஜன்சிங் கூறினார்.

# சப்பல் வீசிய சிக்ஸர்




இந்திய அணித்தலைவர் கங்குலி மீது பயிற்சியாளர் கிரேக் சப்பல் ஆறு புகார்களை மின்னஞ்சல் மூலம் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவருக்கு அனுப்பினார். அந்த புகார்கள் வருமாறு;

தலைவர் பதவியில் நீடிப்பதில் மட்டுமே ஆர்வமாக இருக்கிறார். அதற்காக அவர் அணி வீரர்கள் இடையே பிரித்தாளும் தந்திரத்தை கையாளுகிறார்.

தலைவர் பதவியில் நீடிக்க உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் தகுதியற்றவர். கங்குலியின் தலைமைப் பண்புகளையும், அவர் இடும் கட்டளைகளையும் சகவீரர்கள்யாரும் நம்புவதும் இல்லை. மதிப்பளிப்பதும் கிடையாது.

அதிக காயம் ஏற்படாமலே காயம் அடைந்ததாக நாடகம் ஆடுகிறார். 2007ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டிக்கோ அல்லது வருங்காலத்திலோ அணியைஉயர்நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கம் அவரிடம்இல்லை. உடல் தகுதிக்காக அவருக்குஅளிக்கப்படும் அறிவுரைகளை பின்பற்றுவதும் கிடையாது.

# விளையாட்டு வினையானது குத்துச்சண்டை வீரர் ஜான்சன் மரணம்


விளையாட்டு வினையான சம்பவம் மற்றுமொன்று நடந்திருக்கிறது. தலையில் விழுந்த அதிரடித் தாக்குதல், குத்துச்சண்டை வீரரின் வாழ்க்கையையே முடித்துவிட்டது.

லீவென்டர் ஜான்சன்.... (வயது-35) சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு நடத்தும் குத்துச்சண்டை போட்டியின் லைட்-வெயிட் சம்பியன் பட்டம் வென்றவர். சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் உயிரையே இழந்துவிட்டார் ஜான்சன் லாஸ்வேகாஸ் மருத்துவமனையில் கடந்த வியாழன்று இவரது உயிர் பிரிந்தது.



கடந்த வாரம் நடந்த லைட்-வெயிட் சம்பியன் பிரிவு பட்டத்துக்கான போட்டியில் ஜான்சன்-ஜீசஸ் சாவேஷ் மோதினர். சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் ஆர்வத்தில் கடும் போராட்டம் நடத்தினர். ஜான்சன் மறுமுனையில் சாவேஷ் அடி பின்னி எடுத்து விட்டார். 11 ஆவது சுற்றில் ஜான்சன் தலையில் கன்னாபின்னாவென சரமாரியாகக் குத்து விழுந்தது. அடி தாங்காமல் அப்படியே வளையில் சாய்ந்து விழுந்து விட்டார். இதனால் சாவேஷ் வெற்றி பெற்றதாக நடுவர் அறிவித்தார்.

உடை மாற்றும் அறைக்குக் கொண்டு செல்லப்பட்ட லீவென்டர் ஜான்சன் அதற்குப் பின் எழுந்திருக்கவே இல்லை. நினைவிழந்து கோமா நிலைக்குச் சென்றுவிட்ட அவரை அங்கிருந்து மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர். சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது.



## சிந்தனைக்கு

மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக - எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக - எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக - அமைந்துவிட்டன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# கற்பனையில் ரட்ணசிறி

ஒற்றையாட்சி முறைக்குள் அரசைத் தவிர வேறு எவருமே படைகளை வைத்திருக்க முடியாது என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் ஆட்சியமைப்பு முறை குறித்த விளக்கம் ஆட்சி முறைகள் பற்றிய அறிவு கொண்ட எவருக்கும் தெரியாதல்ல. இவ்வாறிருக்கையில் ஒற்றையாட்சி அமைப்பு முறைக்குள் எவரும் படைகளை வைத்துக் கொள்ளக் கூடாது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தற்பொழுது ஏன் கூறவேண்டும்?

விடுதலைப்புலிகள் இயக்கம் தற்பொழுது படையணிகளை வைத்துக் கொண்டிருப்பதினாலா? அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் கூட்டணி இனப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள் தான் தீர்வு என்பதினாலா?

சிறிலங்கா அரசியல் யாப்பானது இறுக்கமான ஒற்றையாட்சி அரசியல் யாப்பாகவே உள்ளது. இதில் படைகளை வைத்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. ஆனால் இவ் அரசியலமைப்பில் உள்ளவாறு சகல இனங்களினதும் அதிலும் குறிப்பாக சிறுபான்மையினர்களினது உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக இல்லை. நாட்டிலுள்ள சகல பிரஜைகளும், சமஉரிமைகளுடன் சம அந்தஸ்துகளுடன் நடத்தப்படுவதுமில்லை. சமவாய்ப்பு வழங்கப்படுவதுமில்லை. தமிழ்மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டதாகவுமில்லை.

இதன் காரணமாக தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசியல் யாப்பிற்குப் புறம்பானவகையில் மேற்கொண்டுள்ளனர். இதன் வெளிப்பாடே சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு மாறாகத் தமிழர்கள் தமக்கென்ற படை ஒன்றை உருவாக்கியுள்ளமையும், அதனைத் தமது பாதுகாப்புக் கவசமாகக் கொண்டுள்ளமையும் ஆகும். அத்தோடு இப்படை மூலம் தமிழர் தாயகத்தின் பெரும் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டு வந்துள்ளனர்.

இது சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியல் யாப்பிற்கு மாறாக இடம் பெற்றுள்ள விடயம். அத்தோடு இது தனியாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ள படைகளை வைத்திருத்தல் கூடாது என்பதுடன் மட்டும் நின்று விடவில்லை. சிறிலங்கா அரசின் இறைமைக்கும் இது குந்தகமானதாகவே உள்ளது. அதாவது சிறிலங்கா அரசு தன்னை ஒரு தன்னாட்சி அதிகாரம் பொருந்திய இறைமையுள்ள அரசு என்று கூடக் கூறிக் கொள்ள முடியாத நிலையை இது உருவாக்கியுள்ளது.

இதனைத் தவிர தமிழர் தாயகத்தில் தற்பொழுது உருவாக்கப்பட்டுள்ள, உருவாக்கப்பட்டுவரும் ஒரு அரசிற்குரிய கட்டுமானங்கள் -அதாவது காவல்துறை, நிதித்துறை சட்டவாக்கத்துறை, வைப்பகம் (வங்கி) ஒரு பிரதேசத்தில் இருந்து மற்றொரு பிரதேசத்திற்குச் செல்வதற்கான அனுமதி முறை யாவுமே சிறிலங்கா ஒற்றையாட்சி அமைப்பிற்கு மாறுபட்டவையாகவே உள்ளன. ஆகையினால் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சிறிலங்காவின் தற்போதைய நிலையைக் கொண்டே படைகள் இருக்கக் கூடாது எனக் கூறுவாரேயானால் அவர் இன்றைய அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவராகக் கற்பனையில் மிதப்பவராகவே இருக்க முடியும்.

ஆனால் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தீர்வில் படைகளை வைத்துக்கொள்ளமுடியாது என்ற அர்த்தத்தில் கூறியிருப்பின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு அவரோ, அவர் கட்சியோ இன்னமும் தயாராக இல்லை என்பதையே அது உணர்த்துவதாய் இருக்கும். அதாவது ஒற்றையாட்சி முறைக்கு தீர்வு சாத்தியமற்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்ளவோ அன்றிப் புரிந்துகொள்ளவோ தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் இதனைக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைகளுக்குச் சமஷ்டிமுறைத் தீர்வே குறைந்த பட்சத் தீர்வாக முடியும் என்பதைச் சர்வதேச சமூகமே இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்மக்களின் விருப்பு அதற்கு மேற்பட்டதாகவே இருப்பினும் சர்வதேச சமூகத்தின் விருப்பு, அக்கறை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அதனைப் பரிசீலிக்கும் நிலையில் மட்டுமே தமிழ்மக்கள் உள்ளனர். அதாவது தமிழ்மக்கள் சமஷ்டிக்குக் கீழ்நோக்கியதாக எந்தவித அரசியல் தீர்வையும், பரிசீலிக்கத் தயாராக இனிமேல் இருக்கப் போவதில்லை.

அது மட்டுமன்றி சமஷ்டி முறையைச் சிறிலங்கா அரசாங்கம் பரிசீலிக்கத் தவறுமேயானால் தமிழ்மக்கள் அதற்கு அடுத்த கட்டத்திற்காக அதாவது தனியரசிற்கான போராட்டத்திற்கும், தயாராகவுள்ளனர். ஏனெனில் தமிழ்மக்களின் பாதுகாப்பிற்குத் தனியரசே பொருத்தமானது தீர்வாக அமையும் எனத் தமிழ்மக்கள் கருதுகின்றனர். இதற்கு ஏற்றவகையில் அரச கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை மட்டுமல்ல சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லையாயினும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசாகவும், வெளிப்படையாக நிர்வாகத்தைக் கொண்டதாகவும், உள்ளது.

இந்நிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஒற்றையாட்சி பற்றியும், அதன் பண்புகள் பற்றியும், பேசியிருப்பது ஒருவகையில் யதார்த்தத்திற்கு மாறானதொன்றாகவும் இன்னொருவகையில் எதிர்கால அரசியல் தீர்விற்கும் ஏற்றதா இல்லை. இனப்பிரச்சினைக்குச் சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து பொருத்தமானதொரு தீர்வு வரும் என்று தமிழ்மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பது அறியப்பட்டதொன்றே. ஆயினும், ரட்ணசிறி போன்றவர்களின் பேச்சானது தமிழ்மக்களின் நம்பிக்கையை மேலும் வலுவிழக்கச் செய்வதாக்குகின்றது.

# மகிந்தவின் தேர்தல் பிரசாரத்திற்கு அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்

சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதிகாரசபையின் உடமைகளை முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பில் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார். இவற்றுடன் தொடபுடையவர்கள் மீது சனாதிபதித் தேர்தலின் பின்னர் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (32)

## ஓயாதஅலைகள்2...

முடக்கப்பட்டதோடு ஒரு பாதை கடும் எதிர்ப்பு வருகின்ற பாதையாக இருந்தது. அதனால் இடையிலுள்ள ஒரு பாதையால் திடீர் தாக்குதலொன்றை மேற்கொள்ளத் தொடங்கினோம். அந்தப் பகுதி ஓரளவு சாதகமாக அமைந்தது. அதனூடாக முன்னேறி கனகபுரம் ஊடாக ஏழாம் வாய்க்கால் பாதைக்கு ஓர் அணி சென்றுவிட்டது. இந்த அணி தொடர்ந்து கரடிப்போக்குப் பகுதியால் நகர்வை மேற்கொள்ளும்போது எமது அணிகள் மையப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கின. இதனால் எல்லாப் பகுதிகளிலும் எதிரியின் பாதுகாப்பு அரண்கள் கைப்பற்றப்பட்டன. இதேவேளை விநியோகமும் முழுமையாக முடக்கப்பட்டதோடு விநியோகத்திற்கு வந்த ரி.55 ரக துருப்புக் காவி ஒன்றும் ஊடறுப்பு அணிகளால் தகர்க்கப்பட்டதோடு அவர்கள் பின்வாங்க கிளிநொச்சி தளத்தினுள் படுகாயமடைந்தவர்கள் இறந்த உடல்கள் என்பன தேங்கத் தொடங்கின. அத்தோடு இராணுவ கட்டமைப்புக்களும் சீர்குலைந்து போனது. இதனால் தலைமை வகித்திருந்த பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க உடனடி முடிவெடுத்து காயப்பட்டவர்கள். ஆயுதங்கள் எல்லாவற்றையும் கைவிட்டு இருந்த படைகளை திரட்டிக் கொண்டு 28 ஆம் திகதி மாலையளவில் ஓடத் தொடங்கினார். ஓடும்போது அங்கு நின்ற எமது மறிப்பு அணிகள் மேற்கொண்ட தீவிர தாக்குதலில் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சமரின் வெற்றியென்பது ஒவ்வொருபோராளியும் ஒரு மனிதனால் செய்யக் கூடிய செயற்பாட்டைவிட அதிகமாக தம்மை அர்ப்பணித்து செய்த கடும் உழைப்பும் சண்டையில் தம்மை மாய்த்துக் கொண்ட ஒவ்வொரு மாவீரரின் தியாகத்தின் விளைவாகவும் தான் பெறப்பட்டது.அத்தோடு தேசியத்தலைவரின் சரியான திட்டமிடலும் திடமான வழிகாட்டலும் முக்கிய பங்கினை வகித்தன எனக் கூறினார்.

(தொடரும்)

## தமிழர்....

வப்படம் தாங்கிய தண்டிகை வந்தடைந்ததும் தண்டிகையிலிருந்து திருவுருவப்படம் இறக்கப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலின் முன்பாக வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சி பேரவைத் தலைவர் மா.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைக்க, தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை மாவீரர் செவ்வலரியின் தாயார் திருமதி புவனேஸ்வரி அணிவித்தார். தொடர்ந்து உண்ணாநோன்பு ஆரம்பமாகியது. இந்நிகழ்வின் சிறப்புரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்களும் நினைவுரைகளை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, கொழும்பு மாவட்ட தென்னிந்திய திருச்சபையைச்சேர்ந்த கலாநிதி டானியல் தியாகராசா அடிகள் ஆகியோர் வழங்கினர். அதே போன்று பரந்தன் பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றது.

தமிழீழகாவல்துறை நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றது. காவல்துறை நடுவப்பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை காவல்துறை குற்றத்தடுப்புபிரிவு கண்காணிப்பாளர் பா.இயலரசன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றல் மலர் மாலை அணிவித்தல், மலர் அஞ்சலி நினைவுரைகள், உண்ணாநோன்பு இடம்பெற்றன.

மல்லாவியில் தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு இறுதிநாள் நிகழ்வு உண்ணாநோன்புடன் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நினைவுரைகள் பாடசாலை மாணவர்களின் கவிதைகள், பாடல்கள், சிறப்புரைகள் என்பன இடம் பெற்றன.

தியாகி திலீபனின் நினைவு நிகழ்வு நேற்று கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மாணிக்கராசா தலைமையில் நடைபெற்றது.

தியாகி திலீபனின் நினை நிகழ்வு மாங்குளம் பிரதேசத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒட்டுசுட்டான் ஓயாத அலை-03 நினைவுக்கல் நிறுவப்பட்ட இடத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய ஆசிரியர் நந்த கோபால் தலைமையில் நடைபெற்றது.

தியாகிதிலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்திலும் மடுப்பிரதேசத்தில் பண்டிவிரிச்சான் பாடசாலையிலும் இடம் பெற்றது.

தியாகதீபம் திலீபனின் 18ஆம்ஆண்டு நினைவுதினம் நேற்று திருமுறிகண்டிவர்த்தக சங்கத்தினரால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

விசுவமடுப் பிரதேசத்தில் தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்வு கிளி தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முல்லை. நகரத்திலும் எழுச்சியுடன் இடம் பெற்றுள்ளன.நினைவுரைகளை வன்னிபாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் பாலசுப்பிரமணியம், தினேஸ் செல்வபுரம் ஊரக மேம்பாட்டுத் தலைவர் சேதுபதி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேபோன்று அம்பலவன் பொக்கணைப் பிரதேசத்திலுள்ள சாள்ஸ் மண்டபத்திலும், அளம்பில் பாடசாலையிலும், செம்மலை மகாவித்தியாலயத்திலும், (முள்ளிவாய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய பிரதேசங்களிலும் திலீபனின் நினைவு நிகழ்வு எழுச்சியுடன் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வு கனகராயன்குளம், புளியங்குளம்,நெடுங்கேணி ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தியாகி லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நிகழ்வு மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் ஆசிரியர் செல்வகுமார் தலைமையில் இடம்பெற்றது.

தியாகிதிலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வும், கேணல் சங்கரின் 4ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் கிளி. கோவிந்தன்கடைச்சந்தியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி நினைவு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் சேனையூர் மத்திய கல்லூரிலும் மட்டக்களப்பில் பளுகாமம் மாரியம்மன் ஆலய முன்றலிலும், அம்பாறையில் விடுதலைப்புலிகளின் மாவட்ட சமாதான செயலகத்திலும், வவுனியாவில் வவுனியா வடக்கு நெடுங்கேணியிலும் தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ். குடாநாடெங்கும் தியாகி திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள் இறுதி நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. நினைவுத் தூபியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை கடற்கரும்புலி கப்டன் றொசானின் தந்தை மாணிக்கம் அணிவித்தார். தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படம் அவரின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து பொதுமக்களாலும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளாலும் ஊர்வலமாக திலீபன் அவர்கள் உண்ணாநோன்பிருந்த இடத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலுக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை மௌலவி மொகடீன்பிச்சை, கனகசபாபதி (தலைவர், மாவட்ட கூட்டுறவுச்சங்கம்), மாவை சேனாதிராசா (பாராளுமன்ற உறுப்பினர் ) ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை மாவீரர் லெப் . கீர்த்தியின் தந்தை சிவசிறி யோகேஸ்வரக்குருக்கள் ஏற்றிவைத்தார். சாவகச்சேரி கைதடிப் பிரதேசங்களிலும் தியாகி லெப். கேணல் திலீபன் அவர்களின் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றன. சாவகச்சேரி சங்கத்தானை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வு பொது அமைப்புக்களின் ஒன்றிய செயலாளர், வீ. என். சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினை வுரைகளை சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த வ.விஜயரூபன், பா.உறுப்பினர் ரவிராஜ் உள்ளிட்ட பலர் நிகழ்த்தினர்.

வடமராட்சியின் பிரதான நிகழ்வு வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி ஆலடியில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகையினுள் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து சென்று தமிழீழக் கடற்படையின் துணைப்படைப் பயிற்சி பெற்ற துணைப்படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதை செய்தனர்.

தொடர்ந்து தியாகதீபம் திலீபன் நினைவாக உண்ணாவிரதம் இடம்பெற்றது.

இதனைவிட பருத்தித்துறை நகர்ப்பகுதி, நெல்லியடி நகர்ப்பகுதி உட்பட வடமராட்சியின் பல்வேறு இடங்களிலும் கிராமப்பகுதிகளிலும் கொட்டகைகள் அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு, சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. ஒலிபெருக்கிகள் மூலம் தமிழீழ எழுச்சிப்பாடல்களும் ஒலிக்க விடப்பட்டிருந்தன. இதேபோன்று தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களிலும் வெகு சிறப்பாக நடைபெற்றன.


(37,கா.11.28,29,27,சோ.05.)

# யாழ். இளைஞர்களுக்கான தற்காப்பு பயிற்சிகள் நிறைவு



யாழ். மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அண்மைக் காலமாக தற்காப்புப் பயிற்சியினைப் பெற்றுவருகின்றனர். நேற்றைய தினம் மேற்படி தற்காப்பு பயிற்சியில் கலந்து பயிற்சியினை நிறைவு செய்த யாழ். மாவட்ட இளைஞர்களின் ஒரு தொகுதியினரைப் படத்தில் காணலாம். (சோ)

# தமிழீழ கடற்படையின் துணைப்படைப் பயிற்சி மணலாறு மாவட்டத்தில் நேற்று ஆரம்பம்



(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மணலாறு மாவட்டத்தில் தமிழீழ கடற்படையின் முதலாவது துணைப்படை அணியின் பயிற்சி மணலாற்றிலுள்ள லெப்டினன்ட் கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வானது நேற்றுக் காலை 10.30 மணிக்கு கடற்படை துணைப்படை வீரர் பாஸ்கர் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழ கடற்படை தளபதி மங்களேஸ் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை லெப்டினன்ட் கேணல் ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் கீதன் ஏற்றிவைத்தார். லெப்டினன்ட் கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கடற்படைத் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றிவைக்க மலர் மாலையினை போராளி நளன் அணிவித்தார். தொடர்ந்து இப் பயிற்சிப் பாசறையின் பெயர்ப் பலகையினை மணலாறு கடற்படைத் தளபதி முத்திராங்கன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து பயிற்சிப்பாசறை மண்டபத்தில் ஆசியுரை, சிறப்புரை என்பன இடம்பெற்றன. ஆசியுரையினை தமிழீழ கடற்படைத் தளபதிகளில் ஒருவரான விநாயகம் நிகழ்த்தினார். சிறப்புரையினை ராஜன் கல்விப்பிரிவு பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார். இப் பயிற்சிப் பாசறையில் நூற்றுக்கு மேற்பட்ட துணைப்படை வீரர்கள் உணர்வு பூர்வமாக தமது ஆரம்பப் பயிற்சிகளை ஆரம்பித்தார்கள். (தீ)

# பொங்குதமிழுக்கு வலுச்சேர்க்க வடமராட்சியில் ஈருருளிப் பேரணி

தமிழீழ தனியரசை அங்கீகரிக்கக் கோரும் பொங்குதமிழ் நிகழ்வுக்கு வலுச்சேர்க்கும் முகமாக வடமராட்சி மாணவர்கள் ஈருருளிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த உயர் நிலைக் கல்லூரி மாணவர்கள் ஒன்றிணைந்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் நெல்லிடிய நகர்ப் பகுதியிலிருந்து பொங்குதமிழ்ப் பானை தாங்கிய வண்ணம் முச்சக்கரவண்டியின் பின்னால் மாணவர்கள் மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகளையும் பொங்குதமிழ் வாசகங்கள் கொண்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணம் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியூடாக அணிவகுத்து பருத்தித்துறைநகர் வரை அனைவரையும் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கோஷங்களை உரத்து எழுப்பியவண்ணம் சென்றடைந்தனர்.

இப்பேரணியில் 500இற்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்கள் பங்குபற்றி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

## சோமவன்சவின்..

இராணுவத்தைக் கலைக்குமாறு இலகுவாகக் கூறுகிறார். அது இராணுவத்தினரின் சுயநம்பிக்கையைப் பாதிக்கும்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்வு காண வேண்டும். இயலாதென்றால் தான் யுத்தத்திற்குச் செல்ல வேண்டும். ஆனால் யுத்ததால் இதனைத் தீர்க்க முடியாவிட்டால் என்ன செய்வது? இவற்றிற்கு கூற என்னிடம் பதில் இல்லை. யுத்த நிறுத்தம் இருக்கும் வரை யுத்தம் இருக்காதென என்னால் உறுதியாகக் கூற முடியும். யுத்த நிறுத்தத்தை இரத்துச் செய்தால் யுத்தத்திற்குத் தயாராக வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு கட்டாயமாக பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும். அதுபற்றி நான் 15,20 வருடங்களுக்கு முன்னரே கூறியிருக்கிறேன் கொப்பேக்கடுவவும் அதனைக் கூறியிருக்கிறார். இந்த யுத்தத்தை இருதரப்பாலும் வெல்ல முடியாது. அதனை நாம் இருபது வருடங்களாகக் காண்கிறோம். இப்போது இலங்கையின் மாவட்டங்களில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் எமக்கில்லை. அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாண நகரங்கள் மட்டுமே எம்மிடம் உள்ளன. ஏனையவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன அப்படியானதொரு நிலை இருக்கையில் யுத்தத்திற்கு தயாராகுமாறு கூறினால் முடியாது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரம். யுத்தம் புரிய படைவீரர்கள் தேவை. அதனால் ஹெல உறுமயவின் பிக்குகளும் ஜே.வி.பியினரும் காவியைக் கழற்றி வைத்துவிட்டு யுத்தத்திற்குச் செல்லுமாறு நான் கௌரவத்துடன் கூறுகிறேன்.

சோமவன்சவின் இந்தப் பேச்சு பைத்தியகாரத்தனமானதென்றே நான் கூறுகிறேன் என்றார்.

ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறுகையில்;

சோமவன்ச அமரசிங்கவின் உரையை நான் சரியாகக் கேட்கவில்லை. எனினும் இராணுவத்தைக் கலைத்துவிடுமாறு கூறுவதில் அதில் பல அர்த்தங்கள் உள்ளன. சில வேளைகளில் அது முழு இராணுவத்தையும் கலைத்துவிடுமாறு அல்லது யுத்தத்தில் தோல்வியடைந்த பிரதேசங்களில் இராணுவத்தைக் கலைத்து விடுமாறு கூறப்பட்டதாக இருக்கலாம். யுத்தத்தில் சிலவற்றை நாம் வென்றுள்ளோம் அதேபோல தோற்றும் உள்ளோம்.

அப்படி வெற்றியடையும் போது மேலே தூக்கவும் தோற்கும் போது கீழே தள்ளவும் முயன்றால் நாட்டின் பாதுகாப்பிற்கென இருக்கும் சக்திகள் நாசமாக்கப்படுவதைப் போன்றாகிவிடும்.

வடக்கு கிழக்கில் மீண்டும் யுத்தம் செய்தால் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை சுருக்கிக் கொள்ள வேண்டி ஏற்படலாம் அப்போது தற்போது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கேட்பதை விட அதிகமானவற்றை நாம் கொடுக்க வேண்டி ஏற்படும். ஆகையால் யுத்தம் செய்து வெற்றிகொள்ள முடியுமென சோமவன்ச அமரசிங்க நம்புவாராயின் அவ்வாறான விசேட அறிவு அவருக்கு கிட்டியது எப்படியென முதலில் தேட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சர்வதேச சமூகமும் நாட்டின் கல்விமான்களும் சிவில் அமைப்புகளும் பேச்சுவார்த்தை மூலம் இந்தப்பிரச்சினைத் தீர்க்க வேண்டும் என்றே கூறுகின்றன. ஆனால் சோமவன்ச போன்றவர் கள் மேலுக்கு சமாதானம் எனக் கூறிக்கொண்டு கீழால் யுத்தத்திற்குச் செல்வோம் எனக் கூறுகின்றனர். .அது இரட்டை வேடம், யுத்த[illegible]திற்குச் செல்வோம் தோற்றால் [illegible] விடுவோம் என்றே ஜே.வி.பி[illegible] இங்கு மறைமுகமாகக் [illegible] வருகின்றனர் என்றார்.

## புலிகளுடனான..

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் தமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளச் செய்தால் அல்லது புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்றுக்கொண்டால் நாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சொந்த....

ஆறு வருடங்களாக பல்வேறு சிரமங்களின் மத்தியில் தாணிக்குளம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருவதாகவும், தமக்கு நிவாரணமோ அல்லது அடிப்படைத் தேவைகளோ அற்ற நிலையில் தாம் வாழ்ந்து வருவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து வடமேற்கு திசையில் 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மேற்படி கிராமத்தினை இராணுவத்தினர் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்திவிட்டு தமது அனைத்து ஆதாரங்களினையும் இராணுவம் அனுபவித்து வருவதாக அந்த மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். 109 குடும்பங்கள் வாழ்ந்த மேற்படி கிராமத்தில் தற்போது எவரும் இல்லை என்றும், இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை காரணமாக தமது 610 ஏக்கர் விவசாய பூமி பாழடைந்துள்ளதாகவும், தமது கால்நடைகள் 5000இற்கும் மேற்பட்டனவும் இராணுவத்தினரின் பிடியில் அகப்பட்டு இருப்பதாகவும் விவசாய நிலம், மேட்டு நிலம், கால்நடைகளிலிருந்து இராணுவத்தினரே பயனடைந்து வருவதாகவும், இராணுவத்தினர் தெரிவிப்பது போன்று அது உயர்பாதுகாப்பு வலயம் இல்லை என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் என்ற ரீதியில் அதனைச் சென்று பார்வையிட்டு தம்மை மீளக் குடியர்த்துமாறும் அந்த மக்கள் தமது வேண்டுகோள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை பெருமளவில் வவுனியா வைரவர் புளியங்குளம் பகுதியில் அமைந்திருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் காரியாலயத்திற்குச் சென்ற இந்த மக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வவுனியா பிரதிநிதியிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவினை கொடுத்தனர். இதனைப் பெற்றுக்கொண்ட அதிகாரி தான் இராணுவத்தினருடன் இது தொடர்பாக கதைத்து நல்லதொரு முடிவைத் தருவதாகவும் மக்கள் அவசரப்பட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதன் பின்னர் அந்த மக்கள் வவுனியா குருமன்காட்டுப் பகுதியிலுள்ள யு.என்.எச்.சி.ஆர். காரியாலயத்திற்கும் சென்று மாவட்ட பிரதிநிதியிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவினைக் கொடுத்தனர். (21)

## கைக்குண்டு..

தால் விமானப் படையினர் உயிர் தப்பினர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

## மகிந்த...

வேண்டுகோளுக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். சனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் சர்வதேச அமைப்புக்கள் மட்டும் அல்லாது உள்நாட்டு அமைப்புக்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (32)

## இரு..

வழி மறித்துள்ளனர். இதனை அவதானிக்காது சென்ற இவர்களை உந்துருளிப் படையணியினர் துரத்திப் பிடித்து துப்பாக்கிப் பிடிகளால் மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்ற இச் சம்பவத்தில் கடுந் தாக்குதலுக்குள்ளானவர்க ராசரட்ணம் நிதர்சன் (வயது-22), பாக்கியராஜா நவோதயன் (வயது-23) என இனம் காணப்பட்டுள்ளனர்.

மாபெரும் பொங்கு தமிழ்—2005
தேசத்தின் விடுதலைக்காய் குரல் கொடுக்க
அலை அலையாய் திரண்டு வாரீர்!
காலம்:-30.09.2005
இடம்:- யாழ்.பல்கலைக்கழகம்

இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.